# ஓர் சம்பாஷணை.

## தீண்டாமையைப்பற்றி.

(உற்றுக் கேட்டவர் உரைக்கின்றார்.)

[சீனி யென்ற பிராமணரல்லாத வாலிபரும், சுப்பிரமணியன் என்ற பிராமண வாலிபரும் பள்ளிச் சிநேகிதராவர். இவர்கள் நீண்ட நாட் பிரிவின் பின் சந்திப்பேற்பட்ட காலத்து நிகழ்த்திய சம்பாஷணை]

சீனி—சுப்பிரமணியம்! சுகந்தானே? எங்கு வசிக்து வருகிறாய்? என்ன உத்தியோகம்? நமது பிரிவின் பின் நீடித்த நாள் சென்று விட்டதே!

சு—சுகந்தான். திருநெல்வேலியில் இருக்கிறேன். வக்கீல் குமஸ்தா உத்தியோகம். நின் க்ஷேமம் எப்படி?

சீனி—சுகந்தான். வியாபாரத் தொழில் தான்.

திருநெல்வேலி யென்றவுடனே, சீனிக்குத் தீண்டாமையைப் பற்றிய ஞாபகம் திடீரென வுண்டாய், முகத்தில் ஒரு விதக் குறி தோன்றிற்று. சுப்பிரமணியன் அக் குறி யறிந்தவனாய்—சீனி! திருநெல்வேலி யென்றவுடனே உன் முகத்தில் ஒரு விதக் குறி தோன்றிற்றே என்ன காரணம்?

சீ—பாழும் தீண்டாமைக் குறைவிடமான மூன்று ஜில்லாக்களில் திருநெல்வேலியு மொன்றல்லவா வென்ற நினைப்பு அப்படித் தோற்றுவித்தது.

சு—அப்படியா! அவ்வளவு ஆர்வமா!! கீழோர் மேலோரைத் தீண்டவும், அவர்கள் உரிமைக் காசைகொள்ளவும் கூடாது தானே. இதுபற்றி ஏன் கவலை?

சீ—நண்ப, நீ சொல்வது சரி: ஆனால் நீ யாரைக் கீழோர் மேலோர் என முடிவு கட்டினை?

சு—சாதி இந்துக்கள் உயர்ந்தோர்; பஞ்சமர் தாழ்ந்தோர்.

சீ—எவ்வகையில் பஞ்சமர் தாழ்ந்தோர்?

சு—பஞ்சமர் மது மாமிசம் உண்டு, பாபச் செய்கைகளில் உழன்று, இழில் தொழில் புரிந்து வருவதால் கீழோரும் தீண்டத்தகாத வருமாவர்.

சீ—சரி; அத்தகைய பஞ்சம குலத்திற் றோன்றிய பரிசுத்த மனிதனை யெப்படி?

சு—அவன் எப்படியும் பஞ்சமன் புத்திரன் தானே. அவனைத் தீண்டவும் தகாது.

சீ—பிறப்பால் உயர்வு தாழ்வும் கொள்கின்றனையோ! சாதி இந்துக்களில் உயர்ந்தா ரெனப்படும் உங்கள் சாதியை முதலில் எடுத்துக் கொள்வோம். உங்கள் சாதி முறை யென்ன?

சு—வேதம் ஓதுவோம்; மது மாமிசம் உண்ணோம்; இழி தொழில் புரியோம்.

சீ—சுத்த சாதி; ஆனால் இம் முறையில் பிசகினால்?

சு—பிசகினாலு மென்ன? பிராயச்சித்த முண்டல்லவா! பிராமணமணங் குறைந்து விடாது.

சீ—பள பளா! பிராயச் சித்தத்தால் குற்றம் நீங்கி விடுகிறதாம்! என்னே மோசடி! பிராமணர்களில் மாமிசம் சாப்பிடுவதாகக் கேள்வி யுண்டே, உண்மை தானா?

சு—உண்மை தான். ஆனால் மற்றையோரைப் போல் வெறுமனே தின்பதில்லை. எக்கியஞ் செய்து தான் தின்போம்.

சீ—சபாஷ்! தின்பது மாமிசந் தானே? எக்கியஞ் செய்து தின்றால் குற்ற மில்லையோ?

சு—பாதகமில்லை. வேதமும் அப்படித்தான் விளம்புகிறது.

சீ—வேதம் யாரால் வெளியானது?

சு—பிரமாவால்.

சீ—வேதம் பிரமாவால் வெளியிடப்பட்டதில்லை யென மனதிற் கொள். பிரமாவால் சொல்லப்பட்டதென உங்கள் சுயநலப் பிராமணர்களால்தான் சொல்லப்பட்டது. வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனத் தமக்கு வேண்டிய சகல சாதனங்களையும் எய்து கொள்வதற்குச் செய்த சூக்ஷியாகும். சூக்ஷி பலிதமாகவே அக் காலத்தேயுள்ள பாமர ஜனயோரை தெய்வத்தின் பெயரால் அடிமையாக்கப் பிரமதேவன் எனப் புகுத்திக் கொண்டார்கள். பிரம தேவன் வேதத்தை எடெழுத் தாணி கொண் டெழுதி முடித்து இவர்கள் கையில் கொடுத்தான் போலும்! இவர்கள் சகல விதத்தும் மேம்பாடுற்று விளங்கியவர் என்று மட்டும் ஒப்புக் கொள்ளலாம். அத்தகைய ஆற்றல் காரணமாய் ஏனையோரை வஞ்சித்து விட்டார்கள். குதிரையின் மேற் போல் சவ்வாரி செய்து கொண்டார்கள். ஒட்டிய பக்க மெல்லாமல் நடும்படி செய்து விட்டார்கள். பாமர ஏனையோர் என் செய்வார்! பாவம். சுவாமிகள் சொன்னால் சரி யென்று தணிந்து விட்டார்கள். இவர்கள் தங்களை யெம்மட்டும் உயர்த்திக் கொள்ளலாமோ அம்மட்டும் உயர்த்திக் கொண்டார்கள். பிரமாவின் சிரசினின்றும் உற்பத்தி யானவர்கள் என உச்சஸ்தானத்தில் தம்மை யிருத்திக் கொண்டார்கள். ஜனங்களுக்குச் செய்த கொடுமைகளுக் கனுபவிக்க வேண்டிய தொரு புற மிருக்க, இத் தேவ பழியையும் ஏற்றுக் கொண்டார்கள். இந் நய வஞ்சகர்களை பிரமா சிரசில் தாங்கி யிருக்தாராம்! நினைப்பின் வயிறெரிகிறது. இவர்களுக்கிருக்கை பிரமா சிரசாசனமா? நெருப்பிற்குச் சமமாய் நீற்றவல்ல கோபாக்கினி கொண்ட மன்னர்களையும் வயப்படுத்தி விட்டார்கள். எல்லோரும் தெய்வ பக்தி மிக்கவர்களாகையால், இவர்கள் தாம் தெய்வத்தரகர்களெனத் தமக்குள்ள ஆத்ம வல்லபத்தை அவர்கள் பாற் செலுத்த எல்லோரும் மயங்கி விட்டார்கள். தமக்கு யார் யார் மூலம் எவ்வளவுக்கு சகாய மிருந்ததோ அவ்வளவுக்கு அவ்வளவு அவரவர்க்கு வேதத்தில் இடங் கொடுத்தார்கள். பிரயோசன மில்லை யெனக் கண்டவர்களை பெரும் அடிமைக் கேணியில் அமிழ்த்தி விட்டார்கள். என்ன கொடுமை! ஒருவன் பாவஞ் செய்து விட்டால் இவர்களுக்குத் தான தருமஞ் செய்து திருப்தி செய்ய வேண்டுமாம். அதே பாவத்தை இவர்கள் செய்தால் ஏதோ பிராயச் சித்தம் செய்து கொள்வார்களாம்! இவர்கள் நினைத்த பெண்களைப் புணர்ந்து கொள்ளலாம். ஆனால் இவர்கள் பெண்ணை வேறொருவன் புணர்ந்து விட்டால் அவனைச் சித்திரவதை செய்து விட வேண்டுமாம்! இப்படி யெவ்வளவோ அநியாயங்களிருக்கின்றன! இன்னும் புரோகிதச் சடங்குகளின் மர்மங்களென்ன! விரிக்கிற் பெருகும். சுருக்கமாக உங்கள் சுய நலங் கோரி உங்கள் பிராமணர்களாலேயே வேதம் வெளியிடப்பட்டது எனக் கூறுகின்றேன். அதில் உங்களுக்குச் சாதக மில்லாமற் போகுமா? பிரமா பார பக்ஷ மில்லாதவ ராகையால் அவர் எழுதிய வேதத்தில் இப்படிப் பாதக சாதகம் ஏது மிராதெனச் சொல்கிறேன்.

சு—யோசிக்கிறேன்.

சீ—நீங்கள் தான் இப்படி வேத சூது செய்து விட்டீர்களெனச் சிறிது கூறினேன். தாங்கள் நீங்கலாக ஏனைய சாதி இந்துக்களெனப்படுவோரும் ஏன் தீண்டாமைச் சேற்றைப் பூசிக் கொண்டு திரிகிறார்கள்?

சு—வேதத்தில் தமக்குள்ள இடத்துப்படி நடந்து கொள்ளப் பார்ப்பார்கள்.

சீ—வாஸ்தவந்தான்; இவர்கள் உங்களால் மயக் குண்டவர்கள். இவர்களும் மது மாமிசம் மிக மிஞ்சிப் புசிப்பார்கள் என அறிவா யல்லவா?

சு—அறிவேன்,

சீ—பின்னேன் பஞ்சம ரென்பாரைத் தீண்ட முகஞ் சுளிக்கிறார்கள்? ஒரே தன்மை மது மாமிசம் சாப்பிட்டு வரும் இவர்களுக் கேன் இந்த முடக்கு வாதம்?

சு—அடக்கு முறை வழக்கமா யிருக்கலாம்.

சீ—அடக்கு முறை வழக்கமா! வழக்கம் வழக்கம் என்றிருந்தால் நியாயம் ஒழிக்கப்படவா? ஒரு காலத்தில் அறியாமையாலும், அநியாயமாகவும் செய்து வந்த ஒரு கெட்ட காரியத்தைப்பின் சீர்திருத்தி நியாயங் கொண்டு நடப்பதில்லையா? இவர்கள் தீண்டாமை யென்று சொல்லவாவது நியதி யுண்டா? கடைசியில் எல்லோரிலும் மது மாமிசம் சாப்பிடுகிறவர்களும், பாவ காரியஞ் செய்கிறவர்களு மிருப்பதாகவே தெரிகிறது. இந் நிலையில் தாங்கள் தான் மேல் என வல்லபமில்லர் ஒரு சாராரைக் கீழ் வைத்திருப்பது தேவ சம்மதமாகாது. எதிர்த்தறைய வல்லபம் கிட்டு மட்டுக்தானே கீழே யிருப்பார்கள். அவ் வல்லபம் வந்து விட்டதாகவே, தற்போது அறிகுறி தோன்றுகிறது. மேலும் பிறப்பிலும் வித்தியாசம் தெரியவில்லை. எல்லாம் நடப்பில் தொடர்ந்த தோஷந் தான். மது மாமிசம் உண்ணும் பிராமணரும், அவற்றை வெறுக்கும் பஞ்சமரும் மலிந்தே யிருக்கிறார்கள். இக் கோலத்தில் தீண்டாமை யொரு நேர்த்தி! மது மாமிசம் உட் கொள்ளும் சாதி இந்துக்களெனப் படுவாரை உங்கள்பிராமணர் தீண்டிக் கொள்வார்களல்லவா?

சு—ஆமாம்.

சீ—இச் சாதி இந்துக்கள் என்பவருக்கும் பஞ்சமர் எனப்படுவாருக்கும் எவ்வகையிலும் வித்தியாச மில்லை யென ஒப்புக் கொள்வா யல்லவா?

சு—ஆமாம்.

சீ—பின்னேன் இச்சாதி இந்துக்களைத் தாங்கள் தீண்டக் கூசுவதில்லை.

சு—வழக்கத்தில் வந்துவிட்டது.

சீ—அதே போல் பஞ்சம ரெனப்படுவாரையும் தீண்டுவதை வழக்கத்தில் வைத்துக் கொள்ளக் கூடாதா? தோஷம் தொடருமா?

சு—யோசிக்கிறேன்.

சீ—மது மாமிசம் உட் கொள்வதினால் தீண்டக் கூடா தெனும் நியதி யுண்டா?

சு—ஆம்.

சீ—எப்படி?

சு—அது பாதகத் தொழி லாகையால் உட் கொள்பவன் சண்டாளனாகிறான். சண்டாளனைத் தீண்டல் கூடாது.

சீ—களவு, பிறதார கமனம், பொய் முதலியன என்ன?

சு—அவையும் பாதகங்கள் தான்.

சீ—இவைகள் புரிதல் செய்வாரைத் தீண்டுவதில்லையோ?

சு—தீண்டாததாகத் தெரிய வில்லை.

சீ—பின்னேன் மது மாமிசம் பற்றி மட்டும் ஒதுக்க வேணும்?

சு—ஒன்றும் சொல்வதற்கில்லை.

சீ—இழி தொழில் புரிவதினால் என்று கொள்ளின், தொழில் இழிவு ஏதுவும் உண்டா? அத் தொழில் நிகழாவிடில் நம் வாழ்க்கை நடைபெறுவ தெங்ஙனம்? தீட்டு தீட்டு என்றோட்டங் கொண்டு பின் தீட்டுடையார் சாமான்களைக் கேட்டு வாங்கிப் புழங்கிக் கொண்டிருக்கிறார்கள். வக்கீல் வேலை பார்ப்பவனும், வண்ணானும் வயிறு வளர்க்கும் ஓரே கௌரவத்தை நாடித்தான் வேலை செய்கிறார்கள். இழி தொழில்கள் என்பது களவு, விப்சாரம் முதலியன தான். ஜனோபகாரமான எவ் வேலையும் இழிவாகா. இழிவென சகஜமாய் நினைக்கப்பட்டு வருகிறது. இது அறியாமை. யோசித்துணர்க. இத்தகைய தொழிலாளர்களுடன் நாம் அன்புமயமா யிருக்க வேண்டும். உன் அபிப்பிராயம் எப்படி?

சு—நீ சொல்வதனைத்தும் சரிதான்.

சீ—உங்கள் பிராமணர்கள் ஏனைய சாதி இந்துக்களைத் தீண்டிக் கொள்கிறார்களே, ஏன் அவர்கள் தொட்ட ஜலம், ஆகாரம் மட்டும் ஏற்றுக் கொள்வதில்லை? தீட்டு நுழைந்து விடுமோ? பலித்த மட்டும் பார்ப்பார்கள் போலும்!

சு—முதலில் ஆட்களைத் தீண்டியும், அவர்கள் தீண்டிய ஜலம், ஆகாரம் உபயோகிக்காமலு மிருந்து பின் நாளாவர்த்தியில் ஆள் தீண்டல் ஒழிந்து ஆகாரத் தீண்டல் மட்டும் கைக்கொண்டிருக்கலாம். இதுபோலவே நாட் செல்லச் செல்ல எல்லாம் சரியாய்ப் போகும்.

சீ—சரியாய்ப் போகும் சதி இத் தறி தான் என எங்கும் உணர்ச்சி யுண்டாகியிருப்பதால், இதுகாறும் இருந்தது போல் வைதிகர்கள் இனி பிடிவாதங் கொள்ள முடியாது. நியாயக் கேடான காரியத்தை எதிர்க்கயாரும் தயங்கார். விட்டுக்கொடுக்கத்தான் வேண்டும். இலதேல் பெரிய விபரீதமாய் முடியலாம். வேதம் ஒரு சாராருக்குத்தான் என விளங்கி விட்டது. இவ் வுணர்ச்சி வேகத்திற் கெதிர்ப்பட தொதங்கித் கொள்தலே வைதிகர்களுக்கு நன்மை பயக்கும். தீண்டப்படாதார் யாரெனில், நோயாளிகள், அசுத்த முடையார்முதலியவர்கள் தான். அவர்களையும் அன்பு மேலீடு கொண்டு பரிதாப காலத்துத் தீண்டிக் கொள்ள வேண்டியது தான். அக் காலத்தில் மது மாமிசம் புசித்து பாவத் தொழில்களி லுழன்று வந்தவர்களைச் சீர்திருத்துவதற்காகவே மிரட்டுதலாக ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அதினின்றும் திருந்தியவர்களெல்லாம் சேர்த்துக்கொள்ளப்பட, எஞ்சியவர்கள் தீண்டப்படாதவ ரெனவே ஒதுக்கப் பட்டு விட்டார்கள். மிரட்டுதலுக்காக ஒதுக்கி வைக்க, அது தீண்டாமை யெனும் தத்துவத்தைத் தப்பாக நிலை நாட்டி விட்டதே யல்லாமல் தீண்டாமை யெனும் உருக் கொண்ட தத்துவம் ஒன்றுமில்லை. இதுவே நியாய வழக்கு. இதற்கு மாறாக ஜனங்கள் நடந்து வந்து விட்டார்கள். இப்போது தீண்டாமை கொண்டுள்ளோரை நியாயம் உணர்ப்பிக்க எங்கும் உணர்ச்சி தோன்றி விட்டது. பாவத் தொழி லாற்றுபவரைத்திருத்த வேண்டிய தவசியம். அன்னாரை ஒதுக்கி வைத்துத்திருத்துவது தான் கூடாது. அது முடியாத காரியமுமாகும். அன்பே பிரதானம். அதுவே சிவம். அது கொள்ள வேண்டியதே தவம். அத்தகைய அன்பு கொண்டு அன்னாரைச் சீர்திருத்த முற்பட வேண்டும். அன்பு மேலிடும் போது எங்கும் சகோதரத்துவம்; எல்லோரும் ஐக்கியமாவோம். நாம் தற்போது நாடுவ தென்ன? நாம் நாடுவது, வழக்கம் போல் தீண்டாமை நாட்டிலிருந்து வந்தால் கை கூடுமா? சுயராஜ்யத்திற்கு ஒன்று பட்ட பூலம் வேண்டுமே, தீண்டாமை யென்பது கொண்டு நம் பலத்தைக் குறைத்துக் கொண்டால் தேச நலங்கோரியஎவ்வுழைப்பும் துர்லபம் தான். அடிமைச் சனியனும் பிடரியை விட்டிறங்காது. இதில் யாதும் பொய் யில்லை. இது குறித்தாவது தீண்டாமை விட்டு விடக் கூடாதா? இந்தியாவிற்கு சுயராஜ்யம் வந்தாலும் வராவிட்டாலும் முதலில் பஞ்சம ரெனப்படுவாருக்கு சமத்துவம் நாட்டுவதிலேயே நாட்ட மிருந்து வருகிறது. இப்படி யேறித்தான் சுயராஜ்யப் படி யேற வேண்டியதாயு மிருக்கிறது. இப்போது வைதீகர்களைக் கெஞ்சுகிறார்கள். இது சமயம் அவர்கள் யூகமாய் நடந்து கொள்ளுதல் சிலாக்கியமாகும். கெஞ்சுங் காலம் போய் மிஞ்சுங் காலம் வந்தால் நெஞ்ச முருக வேண்டுமே! நாடு இந் நிலைமையிலன்றோ விருக்கிறது! இதை யறிந்தாவது தீண்டாமை தீர்க்கக் கூடாதா? என்ன தான் செய்கிறார்களென வர வரக் கண்டறிவோம்.

சு—சீனி! நீ சாற்றிய தனைத்தும் உணர்ந்தேன். நியாய மென வறிந்தேன். தீண்டாமை கூடிய சீக்கிரத்தில் ஒழிந்து போகும் எனத் தான் அறிகுறிகள் தோன்றுகின்றன. தீண்டாமை பற்பல விடங்களில் ஒழிந்து வருவதாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன். என்னைப் பொறுத்த மட்டிலும் இம் மூடக் கொள்கைக் கினி யாளாக மாட்டேன். என்னைச் சார்ந்தாரையும் திருத்துவேன். என்னைப் போன்று இனி யெல்லா வைதீகர்களும் இணங்கியே விடுவார்கள். இந்திய ஐக்கியப் பிரகாசம் எங்கும் வீசும். சகோதரத்துவம், ஒளிரும். அடிமை வாழ்வும் ஒழியும்.

சீனி—சந்தோஷம். ஆகத்தீண்டாமையும், அடிமைவாழ்வும் ஒழிந்து போக ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

சுபம்!

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## டாக்டர். முத்துலக்ஷ்மி அம்மையாருக்கு ஆதரவு.

### பொட்டுக் கட்டுதல் ஒழிய வேண்டும்.

26—12—27—ல் வெளியிடான "நாடார்குல மித்திர" னில் "பொட்டுக் கட்டுதல் வேண்டுமா ?" என்னும் தலைப்புடன் டாக்டர். முத்துலக்ஷ்மி அம்மையார், சென்னை ஹைக்கோர்ட் வக்கீல் எ. எஸ். நடராஜ அய்யருக்குப் பதிலிறுத்தி யிருக்கிறதைக் கண்ணுற்றோம். அம்மையார் உரைகளெல்லாம் நியாயப் பகுதிக்குரியனவா யிருக்கின்றன. பொட்டுக் கட்டுதல் கூடாதென்பதை மறுக்க ஸ்ரீ ஐயர் முன் வந்து விட்டார். தேவ தாசிகளிடம் வக்கலாத்து வாங்கி தமது வக்கீல் தொழில் சாமர்த்தியம் காட்டி வாதிக்க வந்தனர் போலும்! நியாயத்தின் முன் சாமர்த்தியம் என் செய்யும் ? தாசிகள் நாட்டில் மல் கட்டும் என்பது இவர் கருத்துப் போல் தெரிகிறது. இப் புத்தி கொண்டவர் நாட்டுக்குக் கேடுகர வல்லவர் என்றுதான் கூற வேண்டும். பொட்டுக் கட்டுதல் பரிசுத்த வாழ்வு மேற் கொள்ள வென்பது இவர் நியாயம். நியாயந்தான்; ஆனால் நடை முறை யெப்படி யிருக்கிற தென்பதை இவர் கவனிக்க வேண்டும். ஆதியில் இவர் கூறுமாப் போற்றான் பொட்டுக் கட்டுதலேற்பட்டது. அக் காலத்தில் தான் இவர் சொல்லுக்கு மதிப்பில்லை. பரிசுத்த வாழ்வு கொள்ள வென் றேற்பட்டதே இப்போது பரத்தையர் வாழ்வில் விடிந்திருக்கிறது. பரிசுத்த வாழ்வு என்ற பெயரால் விபசாரத்தனம் நிறைந்து விட்டது. எந்த ஒரு காரியமும் தன் தத்துவ வழி தவறி நியாயக் கேடுற்று வரும் போது அந்தக் காரியத்தை அடியோடு அழித்து விட வேண்டு மென்பது குற்றமா ? சாமிக்கு ஆள் என்ற லோடு வந்து காமிக்கு ஆளாய் மாறி இவ்வழக்கமே பரம் பரையா யிருந்து வருகிறது. தேவப் பணி பூண்டாள் தேவடியாள் என்பதாகும். தேவடியாள் என்னும் பதத்தின் பெருமை தற்போது என்னவாயிருக்கிறது ? விபசாரத்தனம் செய்பவளுக்கன்றோ இப் பெயர் உபயோகிக்கப்பட்டு வருகிறது ! தேவடியாள் என்னும் பதத்திற்கு விபசாரி யென்று பதம் பொறுத்த மட்டும் அர்த்த மில்லாதிருக்க விபசாரி யென்று அர்த்தம் கொள்வதி னின்றும் என்ன அறியக்கிடக்கின்றது ? விபசாரத்திற்கு இவர்கள் தான் முக்கியமானவர்களென் றன்றோ ? இவர்களே விபசாரத்தனத்திற் குரியவ ரென்றும் காட்டுகிறது. இவர் களடியாகவே விபசாரம் நாட்டில் பரவி யிருக்கவும் கூடும். எனவே விபசாரிக்கு தேவடியாள் எனப் பெயர் நாலாயிற்று.

தேவ பணி கொள்ள வென்று பொட்டுக் கட்டிப் பின் விபசாரத்திலிறங்கி விட்டபடியால் பின்னிட்டவர்களும் ஆரம்பத்திலேயே விபசாரிகளாகவே பொட்டுக் கட்டிக் கொண்டு கோயிலுக்குள் நுழைந்து விட்டார்கள். வர வர பொட்டுக் கட்டுதலின் உண்மைத் தத்துவம் மாறி விபசாரியாகவே பொட்டுக் கட்டிக் கொள்ளுகிற தெனும் தத்துவத்துடனேயே பொட்டுக் கட்டிக் கொள்ளும் வழக்கத்தில் வந்துவிட்டது. ஆனால் இவர்களுக்கு மற்ற விபசாரிகளைப் பார்க்கிலும் ஒரு விசேஷ மதிப்புண்டு. அதாவது, தெய்வப் பெயரால் விபசாரம் செய்து வருவதே. இவர்கள் செய்யும் விபசாரம் பற்றி ஒரு குறையும் நினைக்கப்படாது இருந்து வந்திருக்கிறது.

எந்த உண்மைத் தத்துவத்தோடு இவர்கள் ஆலயத்தில் முதலில் நுழைந்தனரோ, அந்தத் தத்துவ காரணமாய் இவர்களைக் கண்ணியமாய் நினைத்து வருகிறார்கள். இவர்கள் குடியிருக்கும் ஆலயங்கள் புனித முள்ளவைகளாம் ! இதில் தான் பேதமை குடி கொண்டிருக்கிறது. இப் பேதமை நீக்கத்தான் அறிவாளிகள் துடிக்கிறார்கள். புனிதமென்று வழுத்தி ஆலயங்களைப் பாழ்படுத்தி வருகிறார்களெனப்தே அறிவாளிகள் கருத்து. இக் கருத்தையே உலகமும் ஒப்புக் கொள்கிறது. விபசாரத்தனம் செய்யும் இடம் எப்படிப் புனிதமுள்ள தாகும் ? என்பதே நமது கேள்வி. விபசாரத்தனம் செய்வதால் புனிதக் கேடு இல்லை யென்று யாராலும் கூற முடியுமா ? விபசாரத்தனம் நடத்தாத பொட்டுக் கட்டிய மாதுகள் எந்த ஒரு குறிப்பிட்ட கோயிலிலாவது இருக்கிறார்களா ? இருப்பினும் அக் கோயிலும் புனிதமான தென்று கூற முடியாது. ஆண்கள் சுவாமி தரிசனத்திற்கு வந்து மையல் பேயடிபட்டுப் போவார்கள். சுவாமி தரிசனம் செய்த பாடிராது. சுவாமி தெரிசனத்திற் கென்று வந்து இவர்கள் தெரிசனத்தையே கண்டு போவார்கள். ஆடவர்களுக்கு ஆலயம் தேவ தாசிகளைக் கண்டு காதல் கொள்ளும் இடமாகவே மாறி விடுகிறது. இதனாலும் ஆலயப் புனிதம் விக்கினமே. எனவே கோயில்களில் பொட்டுக் கட்டிக் கொண்டு மாதர்கள் புகுதக் கூடாதென்று அறிவுறுத்துகிறோம். இவர்கள் புரியும் நாட்டியம் சாமிக்கு உகந்ததாம் ! தாசி லோலர்கள் ஏற்படுத்திய செய்கை யாகுமிது. இவர்கள் பக்கம் வாசஞ் செய்ய விரும்பிய காமுகர்கள் தெய்வப் பெயரால் இவர்களை உன்னதப் படுத்தி வைத்திருக்கிறார்கள். உண்மையில் இவர்கள் தேவ பணி செய்ய விரும்புவதானால், இவ் வழி தவிர்த்து வேறு பரிசுத்த வழிகளில் பணி யியற்றுவது கூடாதா ? விபசாரத்தனத்திற் கென்று நுழையு மிவர்களுக்கு தேவ பக்தி எப்படி யிருக்கும் ? 'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' என்ற நீதி யுண்மை யெனின், ஆலயங்களில் புனிதக் கேடிராது பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். புனிதமில்லா ஆலயங்களில் சாமி தரிசனம் செய்வதைப் பார்க்கிலும் சும்மாவிருந்து விடுவது சாலவும் நன்று. ஆலயம் என்பது பரிசுத்த தேவனைப் பணிய பரிசுத்த இடமாக ஏற்படுத்தப் பட்ட தாகையால், அப் பரிசுத்தத்திற் கானியாயுள தேவ தாசிக் குழாங்களைக் கோயில்களை விட்டு அப்புறப்படுத்த வேண்டும். இக் குழாங்கள் விர்த்தியாகிக் கொண்டிருப்பதற் கேதுவாகவுள்ள பொட்டுக் கட்டும் வழக்கமும் அடியோடு ஒழித்து விட வேண்டும். இவ் விரண்டு மின்றானால் ஆலயங்கள் விபசாரிகள் இடங்களாகி ஆடவர்க் காபத்தும், நாடதற் கப கீர்த்தியும் கிடைத்து, தேவ பழிக்கும் பாத்திரமாக வேண்டும். இதை யோர்த்தே டாக்டர் முத்துலக்ஷ்மியம்மையார் பொட்டுக் கட்டுதல் என்னும் மூட வழக்கத்தை யொழிக்க வரிந்து கட்டி வேலை செய்து வருகிறார். இது கண்டு தாசி லோலர்களும், விபசாரத்தனம் மூலம் வருமானம் கருதுபவர்களும், விஷயம் தெரியாதவர்களும் எதிர்ப்புக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

எந்த ஒரு நல்ல காரியம் செய்யப் புகினும் இடறு கட்டைகள் தோன்றுவதியல்பு. இவ் விடறு கட்டைகள் கண்டு சீர்திருத்தக் காரர்கள் மனமொடிந்து விடக் கூடாது. ஞானக் கோடரி கொண்டு அவற்றை வெட்டி யெறிந்து விட்டு சீர்திருத்த வழி செல்வார்களாக. உண்மைக்கு எப் போலித்தனமும் முன் னிற்காது. பொட்டுக் கட்டும் வழக்கம் சுட்டுப் பொசுக்கப்படுமாக.

### ஆலயந் தொழுவோன்.

குப்புசாமி—ஏ! குஞ்சிதம்! எது வெகு தட்புடலாய் வேஷக் பண்ணிப் புறப் பட்டுவிட்டாய்?

குஞ்—கோயிலுக்குப் போகிறேன்.

குப்—விசேஷம் என்ன?

குஞ்—கண்வெட்டுக் கமலம் சதுர்ப் பெருக்கப் போகிறன்.

---

பங்கஜம் ! பட்டுச்சேலைகளும் வைரக்கல்லாபரணங்களும் உனக்கு ஏராளம் உண்டல்லவா?

பங்—நான் பொட்டுக்கட்டி கோயில் புகுந்ததின் பின் இவற்றிற்கென்ன குறைவா ?

---

அப்பா! இந்தக் கழுதையைத் தொட்டேன்; உதைத்து விட்டது.

அப்பா—அது வைதீகக் கழுதையாயிருக்கும்.

---

## நாடார்கள் சுய மரியாதை சத்தியாக்கிரகம்.

### வாலிபர்கள் முன் வர வேண்டும்.

### தலைவர்கள் கவனிக்க வேண்டும்.

தற்சமயம் நம் நாட்டி லெழுந்திருக்கும் சுயமரியாதை இயக்கம் காட்டுத் தீ போல் எங்கும் பரவி வருகிறது என்பதை யாரே அறியார் ? இவ் வியக்கத்தில் நாடார் சகோதரர்களும் தீவிரமாகவே நின் றுழைக்கிறார்கள். இதுவும் நம் தேசத்தின் முன்னேற்றத்திற்கான அறிகுறி யென்றே சந்தோஷிக்கிறேன். ஆனால் இவ் வியக்கத்தில் எழும்பிய வருணாச்சிரம தர்மப் பிரச்சினையில் மகாத்மா காந்தியடிகளின் அபிப்பிராயம் வேறு பட்டது பற்றியும், அவ் வபிப்பிராய பேத காரணமாய் நாடார் அவ் வையனைப் புறக்கணித்துப் போற்றா தொழிவதான் தேச விடுதலை தடைப்பட்டுப் போமே யென்றும் விசனிக்கின்றேன். அடிகளின் அபிப்பிராய மெவ்வித மிருப்பினும் அவர்களைக் குறை கூறாது தெய்வத்தன்மை பொருந்தியவராயே கருதி வருவோம். நிற்க,

பிராமணர் பிராமணரல்லாதார் இயக்கத்தினூடே எழுந்த சுயமரியாதைப் போரில் நாமும் ஈடுபட்டுக் கொண்டே போனால், நாடார்களின் சுயமரியாதை எங்கே ? என்ற கேள்விக்குச் சரியான விடை யிறுத்து வாரைக் காணோம். வைக்கம் வீரர்—குடியரசர்—சுயமரியாதைத் தாதா ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் ஒடுக்கப்பட்டார்களின் விஷயத்திற்குப் பிராமணர்களே காரண மென்றும், அவர்கள் விட்டுக் கொடுத்தால் அவர்களின் அடிச் சுவட்டைப் பின் பற்றி வரும் வைதீகப் பிராமணரல்லாதார்களும் விட்டுக் கொடுத்து விடுவார்கள் என்றும் அறைந்து வருகிறார்கள். அது உண்மையே ஆயினும் நாடார்கள் விஷயத்தில் மேல் கூறும் சமாதானம் கொஞ்சமும் பொருந்தா தென்பதைக் கோபுரத்தின் மேலிருந்தும் கூவலாம். நாடார்களின் மூன்று பிரதான நகரங்கள் கொள்ளை யிடப்பட்டதற்குப் பிராமணர் காரணர்களல்ல. சமீபத்தில் மகாத்மா காந்தியடிகளின் சுற்றுப்பிரயாணத்தின் போது ராஜபாளயத்தில் நாடார்களின் விஷயமாக அடிகள் எடுத்துரைக்கும் போது கூட்டத்தில் குளப்பம் ஏற்பட்டதும், கோவில்பட்டியிலும் ஷை யார் அதே விஷயமாகப் பேசியதால் மகாத்மாவின் பேரில் அதிருப்தி கொண்டு வழி யனுப்பியதையும் நேரில் பார்த்தோருக்கு நன்கு விளங்கும். இவ்வகளுக் கெல்லாம் பிராமணர்கள் காரண மல்ல. அவ்விடங்களிலுள்ள பிராமணரல்லாதார்களாலேயே நடைபெற்ற தென்பதை ஸ்ரீமான் நாயக்கர் அவர்களுக்கு வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் குல வாலிபச் சிம்ஹங்களே ! அடிமைக் குழியில் வீழ்ந்து கிடக்கும் நம் அன்னையாம் பாரத தேவி சுயேச்சை யடையவும், நம் தேசத்தைப் பாழ்படுத்தி வரும் வருணாச்சிரம தர்மத்தை யொழிக்கவும், விசேஷமாக நமது குலத்திற்குச் சுயமரியாதைப் பங்கம் விளைவிக்கக் கூடிய ஆலயப் பிரவேசத் தடையை நீக்கவும் மார் தட்டி முன் வருங்கள். ஒவ்வொரு சமுகமும் முன்னேற்ற மடைய அந்தந்த சமுகத்திலுள்ள வாலிபர்களையே எதிர் நோக்கி நிற்கு மிக்காலத்தில், நாம் சுயமரியாதை யடைய மற்றவர்களுடைய தயவை எதிர் பார்க்க இது காலமல்ல. காலச் சக்கரத்தின் சுழற்சி அதி வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. 'தன் கையே தனக் குதவி' என்ற நன்னெறியைக் கடைப்பிடித்து உடனே நாடார் சுயமரியாதைச் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்க முன் வாருங்கள். வெற்றிதரக் கூடிய ஞான சூரியன் நமது பக்கமே உதயமாகி இருக்கிறான். விடிந்து விட்டது; இன்னுந் தூக்கமேன் ?

நாடார் குலத் தலைவர்களே ! பெரியோர்களே !! யாருக்கு வந்த விருந்தோ என்று வாளா விராமல், அநேக நாட்களாக நம் உள்ளத்தில் உறுத்திக் கொண்டிருக்கும் ஆலயப் பிரவேச உரிமையை யடைய சுயமரியாதைப் போர் புரிய எம் போன்ற வாலிபர்களைத் தட்டி யெழுப்பி துணை புரியுங்கள். சத்தியாக்கிரகம் செய்யத் தருந்த கால மிதுவே. அநேக தேசத் தொண்டர்களும், சுயமரியாதை வீரர்களும் நமக்குத் துணை செய்யக் காத்திருக்கிறார்கள். ஆனதால் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்கத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஐயா, நாகபட்டணம் எஸ். சே. இராமசாமி நாடார் அவர்களே ! எட்டாவது மஹா நாட்டில் திட்டமாய்த் தொண்டர் படை சேகரித்து சத்தியாக்கிரகம் செய்வோ மென்று மார் தட்டி முன் வந்தீர்கள். அப்போது தொடை நடுங்கிய நமது தலைவர்களால் தங்களுடைய தீர்மானம் வீழ்த்தப்பட்டது வருந்தத்தக்கதேயாயினும், பதினோராவது மஹா நாட்டில் தங்கள் தீர்மானம் ஏகமனதாய் நிறை வேறி யிருப்பதை யறிந்தும் தாங்களிது வரை சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்கா மலிருப்பது நமது குலத்திற்குச் சுயமரியாதைப் பங்க மென்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். "முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்" என்ற ஆன்றோர் வாக்கியத்தைக் கடைப்பிடித்து தங்கள் தலைமையின் கீழ் தொண்டர் படை சேகரித்து உடனே நம் சுயமரியாதைக்காகச் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்குமாறு மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் கிருபை பாலிப்பாராக. சுபம் !

வ. சி. ச. சிவக்கொழுந்து நாடார்,
திருத்தங்கல்.

---

## ஸ்ரீ ஷவுக்கதலியின் வீரமொழி.

### சுத்த ரத்தம் ஓடுகின்றதா ?

[ஸ்ரீ ஷவுக்கதலி 28-12-27-ல் சென்னை கோகலே மண்டபத்தில், வாலிபர் சங்க ஆதரவில் கூடிய கூட்டத்தில் "வாலிபர் இலக்ஷியங்கள்" என்பது குறித்து நிகழ்த்திய சொற் பெருக்கின் ஒரு பகுதி.]

விடுதலை சாதாரணமாய்க் கிடைத்து விடாது. அதற்குள்ள விலையை நீங்கள் கொடுத்தாகவேண்டும். ரூபாய்க் கணக்கில் அது கொடுக்கமுடியாது. ரத்த மயமாய்ச்சொரியவேண்டும். நம் முன் சில்லரைச் சண்டைகள் புரிய இது சமயமல்ல. நமக்கு எல்லாம், நம்மை எல்லாம் சேர்ந்தார்போற் அடிமைப் படுத்திவரும் பொதுவான சத்ரு இருக்கின்றான். என்னைப் பற்றிய வரை நான் ஒரு சிறிதும் கவலைப் படப்போகிறதில்லை. எனக்கு 54 வயதாகி விட்டது. வெகு உற்சாகமாகவே காலந் தள்ளியாய்விட்டது. என்னைத் தூக்கிவிட்டாலும் நான் பொருட்படுத்தப்போகிற தில்லை. யுத்தகளத்திலிருந்தும் நான் ஓடிவந்து விட மாட்டேன். ஓட விரும்பினாலும் என் தேகத்தைத் தூக்கிக்கொண்டு ஓட முடியாது. அந்த விஷயத்தில் எனக்கு ஒரு பெரிய அனுகூலமிருக்கிறது. மார்பில் குண்டு பாய்ந்துதான் நான் சாவேன். சாகுந் தருவாயிலும் என் நாடு விடுதலை பெறட்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டேதான் பிராணனை விடுவேன். அதன் விடுதலைக்காகப் போர் புரிந்தேன் என்ற திருப்தியுடன் மடிவேன். உங்கள் நரம்புகளில் நல்ல சுத்த ரத்தம் ஓடுகின்றதா? அப்படியானால் இந்த அடிமைத்தனத்தின் அவமானத்தை நீங்கள் உணர வில்லையா ? நல்ல ரத்தம் உடம்பிலிருந்தால் இந்த மானக்கேட்டை இனிமேலும் சகித்துக்கொண்டிருப்பீர்களா?

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முக்தி
அருவுருவத் தன்மை நாம
மேது மின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்
சோதியை மாத்தூ வெளியைமனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்
தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

நாடார்குலமித்திரன்

பிரபவ ௵ மார்கழி மீ ௰௮ உ

## தேசியத் திருவிழா.

அகில இந்தியக் காங்கிரஸ் மகாசபை என்னும் தேசியத் திருவிழா 42-வது கொண்டாட்டம் சென்னையில் டாக்டர். அன்சாரி தலைமையின் கீழ் வெகு ஆடம்பரத்துடன் நடந்து முடிந்துவிட்டது.

இம் மகாசபை இந்தியாவிலுள்ள எல்லா ஜனங்களுடைய நன்மைக்காகவே 1885-ம் ௵த்தில் ஏற்பட்டது. ஆரம்பத்தில் அதற்கு இடப்பட்ட பெயரும் "பாரத ஜாதீய ஐக்கிய சங்கம்" என்பதுதான். அதன் பெயருக்கேற்ப நம் பாரத நாட்டின் மக்கள் முன்னேற்றத்துக்கு வேண்டிய நன்மையைக் கவனித்து வருவதற்கேதுகாமாகப் பெரிய மனிதர்கள் ஒன்றுகூடி முதலாவது பம்பாயில் காங்கிரஸ் என்ற பெயரோடு அமைக்கப் பெற்று, பற்பல மேதாவிகள் நன் முயற்சியின் பேரில் உருவாக்கப்பட்டு வந்திருப்பதுடன், படித்த இந்தியர்களுடைய அபிலாசம் இன்னதென்று பிரிட்டிஷார் எளிதில் அறிந்துகொள்ளுங் கருவியாகவுமிருந்திருக்கிறது. காங்கிரஸின் உத்வேகமும், கொள்கையும் எவ்வளவு உயர்ந்தனவோ அவ்வளவுக்கு அதிகமாகப் படித்தவகுப்பினருக்கு உத்தியோகங்கள் கிடைத்தும் வந்தன. சுமார் முப்பது வருடங்களாக இச் சபை படித்த இந்தியருக்கு உத்தியோகமும், பணக்காரர்களுக்குப் பட்டமும் திட்டமாய் வாங்கிக் கொடுக்கும் பெருங் கழகமாயிருந்து வந்ததென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. படித்தவர்களுக்கு உத்தியோகங்கள் கிடைக்க, ஒரு வகுப்பார் பிச்சையெடுத்தாவது படித்து உத்தியோக மடைவதே லட்சியமாகக் கொண்டு எல்லா உத்தியோகங்களையும் தன் மயமாக்கிவிட்டார்கள். இதனால் ஏழைகள் தீண்டாட்ட மொழிந்ததா? அடிமைத்தன மகன்றதா? இல்லை இல்லை. வறுமையும், கொடுமையும் வலுத்து வந்தது. மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவை விட்டு வந்து இத் தேச மகாசபையை ஏழைப் பிரதிநிதி சபையாக்கி, ராஜீயக் குதிரைகளைக் குத் தேசியக் கடிவாளம் போட்டு உத்தியோக முகப்பட்டாவைக் கழற்றி ஒற்றுமை முகப் பட்டா கட்டி ஒற்றுமையாமை யெனும் பாதையில் சாத்தியம் பண்ணி வைத்தார். அதுகண்ட பலனுலே சுதேச மென்றால் எது; சுயராஜ்யம் என்றால் என்ன; காங்கிரஸ் எதைச் செய்யும்; நாம் என்ன செய்ய வேண்டும் என்று ஒவ்வொருவரும், இந்தியரும், இந்திய ஸ்திரீகளுங் கூட எண்ணலானார்கள். பிரிட்டிஷாரும், மகாத்மா காந்தி அவதாரம் பிரகலாதவதாரமோ! இந்தியாவை ஒருக்கால் இழக்கத்தான் நேருமோ! என்று மிருந்த கவலையுடன் எண்ணலானார்கள். ஒவ்வொரு காங்கிரஸையும் மட்டுமல்ல, ஒவ்வொரு பொது ஸ்தாபனத்தையுமே என்ன செய்கிறது; என்ன பேசுகின்றார்கள் என்று அழுத்தமாய் நினைக்கலானார்கள். எதைக் கொடுத்தால் எப்போதும் போலிருக்கலாமென்ற சிந்தனையுடையவரானார்கள். காங்கிரஸ் செய்யும் ஒவ்வொரு தீர்மானமும் ஆணித்தரமானதென்றும் பிரிட்டிஷார் பிசகாமல் எண்ணலானார்கள்.

நாளடைவில் அதிகப் படித்த சில சுய நலக் காரர்களும், பொய் வேசக்காரர்களும் மகாத்மா காந்தி கஷ்டமான கைராட்டினம், கதர் கட்டுதல், மது விலக்கு, தீண்டாமை முதலியவைகளை அனுஷ்டிக்கச் சொல்லுகிறாரென்றும், அவர் நிர்த்தாட்சண்யமுடையவரென்றும், பார்ப்பானையும், பறையனையும் ஒன்றாகப் பார்க்கிறாரென்றும், அவருடைய கொள்கை ராஜீய உலகத்துக்கு உதவாதென்றும் அவரை ஒதுக்கி வாழ ஆரம்பித்தார்கள். அவரும் பெல்காமில் தேசியத் திருவிழாவைத் தாமே நடத்திப் பார்த்து விட்டு அதிகப் படித்தவர்கள் சார்பில் விட்டு விட்டு ஒதுங்கி நின்றார். அதன் பின் கான்பூர் கௌஹாத்தித் திருவிழாக்களெல்லாம் சுயநலக்காரர்கள் இஷ்டம்போல் நடந்தன. செய்யும் தீர்மானங்களும், பேசும் பேச்சுகளும் பிரிட்டிஷாரை மிரட்டிப் பணிய வைத்து விடலாமென்றே செய்தும், பேசியும் வரப்பட்டன. இந்த வெறும் சல சலப்புக்கெல்லாம் கொஞ்சமும் அஞ்சாத பிரிட்டிஷ் சிங்கமென்ற முறையில் லார்டு பர்க்கன் ஹெட் வெகு துணிவாக ஸைமன் கமிஷனை அமைத்து விட்டார். நாளைக்கே இங்கு அனுப்பவுமிருக்கிறார். இந்த மிடுக்கான கோதில் சென்னையில் தேசியத் திருவிழா நடக்க ஆரம்பித்தது.

பொதுவாகத் திருவிழா வைபவங்கள் மேல் பார்வைக்கு அழகாகத்தான் தோன்றுகிறது. ராஜீய மேசையில் வைத்து ஆடும் சுயநலச் சூதாட்டத்தில் காங்கிரஸை பந்தயமாக வைத்து ஆடுவது போன்ற கொள்கை மாறாமலிருப்பது தான் நன்றாயில்லை.

உபசாரணைக் கமிட்டிச்சேர்மென் திரு. முத்துரங்க முதலியார் பேச்சும், தலைவர் டாக்டர். அன்சாரி பேச்சும் முதலாவது முரண்பட்டுக் கிடக்கின்றது. அவ் விருவரும் எவ்வளவோ நிதானத்துடன் பொருந்தகையோடு பேசியிருக்கிறார்களென்றாலும் ஜனங்களை முன்னேற்றிக் கொண்டு போகக் கூடிய நிர்மாணத் திட்டங்களை உள்ளடக்கிப் பேசியதாக இல்லை. கதரைப் பற்றி இருவரும் ஒரு வார்த்தையாவது சொல்லவில்லை. தீண்டாமையைப் பற்றி ஏதோ சில வார்த்தைகள் டாக்டர். அன்சாரி எழுதி வைத்து விட்டார். அதுவும் தென்னாப்பிரிக்கா பார்லிமெண்டாரும், லார்டு பர்க்கன் ஹெட்டும் தீண்டாமையைப் பற்றி இடித்துரைத்திருக்கின்றார்களென்பதற்காகவும், இந்தியாவிலும் 7 கோடி மக்கள் கண்களும் விழிப்படைந்திருப்பதை நோக்கியும், ஒப்புக்குச் சொல்லியிருப்பதேயன்றி உண்மையில் தீண்டாமையைப் பற்றி காங்கிரஸ்காரருக்குக் கவலையே கிடையாது. இக் காங்கிரஸை ஏமாற்றுந் திருவிழாவென்று "குடியரசு" எழுதியிருக்கிறது. நாம் அவ்வளவு மோசமாக நினைக்கவில்லை. ஆனால் "குடியரசு" கூறுவதில் அதிகமாக ஒப்புக் கொள்ளத்தக்க உண்மையில்லாமலுமில்லை. நடவடிக்கைகளைப்பற்றியும், மற்றுந் தீர்மானங்களைப்பற்றியும் மறுமுறை எழுதுவோம்.

---

## சென்னைக் காங்கிரஸ்த் தோற்றம்.

(நமது நிருபரிடமிருந்து.)

இவ்வாண்டில் அகில இந்திய 42-வது காங்கிரஸ் மகாசபை சென்னையில் டாக்டர். அன்ஸாரி தலைமையிற் கூடியிருக்கிறதென்பது உலகப் பிரசித்தமாயுள்ளது.

இக்காங்கிரஸ் அதி மேன்மையுடன் நடைபெற வேண்டி ஏற்கனவே சென்னை தேசியப் பத்திரிகைகள் செய்த விளம்பரங்களுக்கோ அளவில்லை. அவ் விளம்பரங்களைப் பார்த்தும் காங்கிரஸ் முழக்கத்தைக் கேட்டும் நாலு பக்கங்களிலிருந்தும் மக்கள் வந்து குவிந்துகொண்டிருந்தார்கள். கோர்ட்டுகளுக்கும் மாணவர்களுக்கும் விடுமுறை காலமாகையாலும் ஜனவரிப் பண்டிகை தினமான தினுலும் தொடர்ந்து சுமார் 25 மகாநாடுகள் கூடவிருப்பதாலும் ஜனக் கூட்டம் அதிகமென்பதில் தடையில்லை. தேசியத்தலைவர்கள் வந்து இறங்கக் கூடிய ரெயில்வேஸ்டேஷன்களிலெல்லாம் ஜன நெருக்கடி தள்ளமுடியாமலே இருந்தது. ஆனால் டாக்டர். அன்சாரி, ஸ்ரீமதி ஸரோஜனிதேவி முதலிய தலைவர் வந்த தினத்தில் கூட்டம் அதிகமிருந்ததாகக் கூறும் பத்திரிகைகளிலெப் படித்தது போலிருந்ததில்லை. சாதாரணமாக ஜெனரல் ஸ்டேஷன் முன்பாக கொஞ்ச நேரம் இருபாகங்களிலிருந்து போய் வரும் ஜனங்கள் நின்றுவிட்டாலும் எள் விழ இடமிராது. மகாத்மாகாந்தி வருகிறாரென்றுதான் அவ்வளவு ஜனங்களாவது கூடினார்களென்று பேசிக்கொள்ளப்பட்டது. மகாத்மா அடுத்த ஸ்டேஷனிலே இறங்கிப் போய்விட்டதாக ஜனங்கள் ஏமாற்றமடைந்தாலும், டாக்டர். அன்சாரி மோட்டார் வாகனத்தில் நின்று புன் சிரிப்புடன் ஜனங்களை அன்புடன் நோக்கி சலாம் செய்துகொண்டே ஊர்வலம் சென்ற சிறப்பு ஜனங்கள் மனதைக் கவர்ச்சி பண்ணியதென்று சொல்லலாம்.

எழும்பூருக்கும் சைதாப் பேட்டைக்கும் மத்தியிலுள்ள மைதானத்தில் காங்கிரஸ் நகர் அமைக்கப்பட்டிருக்கிறது. சுமார் 50 ஆயிரம் பேர்களிருக்கை கொள்ளக்கூடியவாறு விசாலமாயமைக்கப்பட்டிருக்கிறது. பிரதிநிதிகளுக்கு சாகை வெகு சவுகரியமாகச் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. தண்ணீர் வசதியும் மின்சார வெளிச்சமும் போதுமானதாய்க் காணப்படுகிறது. மதுபான சீர்திருத்த மகாசபையில் குடிகாரன் பிரதம ஸ்தானம் வகிப்பதுபோல் சுதேசக் கைத்தொழிற் கதர்க் காட்சியுடன் அன்னியநாட்டுப் பொருட் காட்சியும் ஆட்சி பெற்றிருந்தது. பல மாகாணக்கதர்களும் காக்ஷித்து வந்திருந்தன, பல மாகாண நூல் நூற்போரும் காணப்பட்டனர். கதர் நல்ல அபிவிருத்தியடைந்திருக்கிறது. ஏராளமான கதரும் விற்பனையாயிற்று. ஆயினும் பொருட்காட்சியையப் பார்த்ததைப்போல் ஜனங்கள் கதர்க் காட்சியில் கண்ணோட்டம் கொண்டாரில்லை. வீணாடம்பரமான பொருட்களை ஜனங்கள் அதிகமாய் நோக்கினர். பொருட்காட்சியிலதேல் கதர்க்காட்சி என்றுங் கண்டிராத பெருங்காட்சியாக இருந்திருக்கக்கூடும். சென்னைக் காங்கிரஸ் கமிட்டியார் பொருட்காட்சிக் கிடங்கொடுத்தது பத்தினி கூட்டத்தில் அவிசாரிகள் தங்க இடந்தந்ததொக்குமென்றே அறிவாளிகள் கருதுகின்றார்கள்.

காங்கிரஸ் கொட்டகைக்குத் திலகர் மண்டபம் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. அம் மண்டபம் தென்னங் கீத்துகளா லமைக்கப் பட்டிருந்தாலும் மிகப்பிரமாண்டமாகவும், அழகாகவும் நல்ல அமைப்பாகவுமிருக்கிறது. தேசியக் கொடிகள் பறக்கின்றன. தலைவர்கள் மேடையும், பிரசங்க மேடையும், ஓசை பரப்புங் கருவியும், பற்பல தேசாபிமானிகள் திருவுருவப்படங்களும், உள்ளமைப்பும் பார்க்கத்தக்கதாயுள்ளன.

மாதர்களுக்குப் பிரத்தியேக இடமுண்டு. காங்கிரஸ் மண்டபம் சுமார் 300 அடி நீளமும், 300 அடி அகலமுமிருக்கும். விஷயாலோசனைக் கூட்டம் கூடவும் மண்டபத்திற்குப் பக்கல் ஒரு கொட்டகை போடப்பட்டிருக்கிறது. இதை யடுத்து பிரதிநிதிகளுக்கென 10 வரிசைக் குடிசைகள் போடப்பட்டிருக்கின்றன. தந்தி, தபால், பாங்க், இலாபத் கமிட்டி காரியாலயங்களும், போலீஸ் ஸ்டேஷனும் ஏற்பட்டிருக்கின்றன. காங்கிரஸ் நகரில் உள்ள பாதைகள், இடங்கள் தேசியத் தலைவர்களின் பெயர்களிடப்பட்டிருக்கின்றன. ஆடவத் தொண்டர்கள் 600 பேர்களும், ஸ்திரீ தொண்டர்கள் 50 பேர்களும் பேருழியஞ் செய்து வருகின்றனர். ஸ்திரீ தொண்டர்கள் முன் வந்தது ஈண்டு குறிப்பிடப்பாலது. பிரதிநிதிகளுக்கு இலவசமாக ஓர் வாசகசாலை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. பிரதிநிதிகள் அசுகங் காணின் சிகிச்சை பெறத்தக்க வசதியுள்ள வைத்தியசாலையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். பலவகையிலும் சௌகரியங்கள் திருப்திக் குகந்த மாதிரியே யிருக்கின்றன.

காங்கிரஸ் முதல் நாளன்று, காலையிலிருந்தே ஜனங்கள் வந்து கூடிவிட்டார்கள். மோட்டார் வாகனங்கள் மைதானத்தின் ஒரு பகுதியை நிரப்பிக் கொண்டிருந்த காட்சி இந்தியா எவ்வளவு அடிமைப் பட்டிருக்கிறதென்பதை விளக்கா நின்றது. மாட்டு வண்டி, குதிரை வண்டி மருந்தாயிருந்தன. இருபது வருடங்களுக்கு முன் சென்னையைப் பார்த்த ஒருவன் இந் நகரம் எந்நகரமோ வென்று சிந்திக்கக்கூடும். ஒவ்வொரு தலைவரும் வந்து மண்டப வாயிலில் நுழையும் போதெல்லாம் ஜனங்கள் ஆரவாரம் செய்துகொண்டே நின்றார்கள். மகாத்மா காந்தி வந்து சேர்கிறவரையும் வெளிப்பாதைகளை ஜனங்கள் அடைத்துக் கொண்டு நின்றார்கள். அவர் உள்ளே சென்றதும் உள்ளொலியும் புற வொலியும் ஒன்று சேர்ந்து மேக முழக்கம் போலிருந்தது. மகா மண்டபத்துக்கு அருகேயுள்ள மைதானத்தில் நீல் சிலை சத்தியாக்கிரகத்தைப் பற்றி நித்தம் இளைஞர்களின் பிரசங்கங்கள் நடந்தன. முதல் நாள் சம்பிரதாயப்படி எல்லாக் கிரியைகளும் வெகு ஆரவாரத்துடன் நடந்து முடிந்தன. திரு. எஸ். ஸ்ரீநிவாச அய்யங்காரின் திருவுருவப்படத் திறப்பு விழா நடைபெற்றது.

இரண்டாம் நாள் அவ்வளவு ஆரவாரமில்லை. காங்கிரஸ்ப் பிரதிநிதிகளுடைய அனேக டிக்கட்டுகள் வெளியில் விற்பனை செய்யப்பட்டன. பல சினேகிதர்களுக்கு இலவசமாயும் வழங்கப்பட்டன. காங்கிரஸ்த் தீர்மானங்களெல்லாம் எப்படியிருக்க வேண்டும்; எவ்வாறு நிறைவேற்ற வேண்டுமென்று சென்னைப் பிராமணர்கள் திட்டம் போட்டிருந்தார்களோ அதில் கொஞ்சமும் மாறுதல் வராத படிக்கு பக்குவமாய் பலனைப் பய

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# சென்னை, அகில இந்திய காங்கிரஸ் மகா சபையில்

## நிறைவேறிய தீர்மானங்கள்.

1. காங்கிரஸின் மாஜி காரியதரிசிகளில் ஒருவரான பாபு பிருதிவிஷ் சந்திரராய் கால கதியடைந்துவிட்டதற்கு இந்தக் காங்கிரஸ் வருந்துவதுடன், அவருடைய குடும்பத்தினருக்குத் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

2. காகோரி வழக்கில் ஸ்ரீயுக ராமபிரஸாத்பிஸ்மால், ராஜேந்திரநாத லாகிரி, ஆஷ்புகுல்லா, ரோஷன் இவர்களுக்கு கோரத்தனமாசப் பழிவாங்கும் சுபாவத்துடன் மரண தண்டனை விதிக்கப்பட்டதில் நாடெங்கும் கொதிப்பு ஏற்பட்டிருந்தும், அந்தத் தண்டனையைச்சிறைத்தண்டனையாக மாற்றாமல் கவர்ன்மெண்டார் அலக்ஷியமாக இருந்துவிட்டதில் தனக்குள்ள ஆழ்ந்த துக்கத்தை இந்த காங்கிரஸ் தெரிவித்துக் கொள்ளுவதுடன், அவ்விதம் பலியிடப்பட்டவர்களின் குடும்பத்தினருக்குத் தனது மனப்பூர்த்தியான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

3. ஏகாதிபத்தியப் பித்தத்திற்கு எதிரிடையாக பிரஸ்ஸல்ஸில் சென்ற டிசம்பர் மாதத்தில் நடந்த மகாநாட்டில் ஏகாதிபத்தியப் பித்தத்திற்கெதிரிடையான சங்கமொன்று ஸ்தாபிதமாயிருப்பதை இந்த காங்கிரஸ் வரவேற்பதுடன், ஏகாதிபத்தியப் பித்தத்திற்கு எதிரிடையான போராட்டத்தைத் நடத்துவதற்கு இந்த சங்கத்துடன் கலந்துகொள்ள வேண்டுமென்று அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் செய்திருப்பதை அங்கீகாரம் செய்கிறது.

4. சீனக்காரர்கள் கதிமோட்சமடைவதற்காக நடத்திவரும் போராட்டத்தில் தனக்குள்ள அனுதாபத்தையும், அவர்கள் வெற்றி பெற வேண்டி வாழ்த்தையும் இந்த காங்கிரஸ் அனுப்பிப்பதுடன், இந்தியா கவர்ன்மெண்டார் சீனவுக்கு அனுப்பியிருந்த வைத்திய தூதுக்கு அனுமதிகொடுக்க மறுத்ததை அழுத்தமாகக் கண்டிக்கிறது. தங்களுடைய ஏகாதிபத்திய ஆசைகளைப் பெருக்கிக் கொள்ளுவதற்காகவும், சீனக்காரர்கள் சுதந்திரமடைய முடியாமல் தடுப்பதற்காகவும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்தியத் துருப்புகளை இன்னமும் உபயோகித்து வருவதில் தனக்கு இருந்து வரும் ஆழ்ந்த கொதிப்பைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

சீனவில் இன்னமும் இருந்து வரும் இந்தியத் துருப்புகளையும் போலீஸ் படைகளையும் உடனே திரும்ப அழைத்துவிட வேண்டுமென்றும், ஏகாதிபத்தியக் கொள்கையை எதிர்த்து நிற்கும் இந்தியர்களுடைய சகாக்களாக சீனக்காரர்கள் இருப்பதால் இனி இந்தியர்கள் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் சார்பாக சீனக்காரர்களுடன் சண்டை செய்யவாவது, அவர்களுக்கு விரோதமாக வேலை செய்யவாவது சீனவுக்குச் செல்லக் கூடாதென்று இந்த காங்கிரஸ் கோருகிறது.

மெஸோபொடோமியா, பர்ஷியா, பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள், அந்நிய நாடுகள் இவைகளில் எங்கெங்கு இந்தியத் துருப்புகள் இருக்கின்றனவோ அவைகளை அந்தந்த இடத்திலிருந்து திரும்பு அழைத்துவிட வேண்டுமென்று இந்த காங்கிரஸ் கோருகிறது.

5. பிரயாண அனுமதிச் சீட்டுகள் கொடுக்க மறுப்பதன் மூலமாக சில இந்தியர்கள் அன்னிய நாடுகளுக்குச் சென்று வர முடியாமலும் அந்நிய நாடுகளிலுள்ள இந்தியர் இந்தியாவுக்கு வர முடியாமலும் கவர்ன்மெண்டார் தடுப்பதை இந்த காங்கிரஸ் கண்டிக்கிறது. அனாவசியமான பிரயாண அனுமதிச் சீட்டு நிர்ப்பந்தங்களை எடுத்துவிட வேண்டுமென்றும் இந்தியாவிலிருந்து வெளியே செல்லவும், வெளியிலிருந்து இந்தியாவுக்கு வரவும் பூரண சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்றும் இந்த காங்கிரஸ் கோருகிறது.

ஸ்ரீமான் சக்ளத்வாலா இந்தியாவுக்கு வருவதற்குக் கொடுத்திருந்த அனுமதிச் சீட்டை ரத்து செய்து அவர்கள் தேசத்திற்குத் திரும்ப முடியாமல் தேசப்ரஷ்டமாகும்படி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் செய்துவிட்டதை இந்த காங்கிரஸ் முக்கியமாகக்கண்டிக்கிறது. தம்மை ஆதரிப்பதற்கு இரண்டாவது மனிதன் ஒருவன்கூட இல்லாமலிருந்தும், இந்தியாவுக்கு விரோதமாகவுள்ள ஒரு சபையில் இந்தியாவின் சுதந்திரத்திற்காக ஓயாமல் தைரியமாக ஸ்ரீமான் சக்ளத்வாலா போராடி வருவதை இக்காங்கிரஸ் பாராட்டுகிறது.

6. இந்தியாவிலும், கீழ்சமுத்திரங்களிலும் முக்கியமாக வடமேற்கு எல்லைப் புறத்திலும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் பிரமாதமாக யுத்த ஸன்னத்தம் செய்து வருவதைக் கவலையுடன் இக்காங்கிரஸ் கவனித்து வந்திருக்கிறது. இத்தகைய யுத்த முஸ்தீப்புகள் இந்தியாவின் சுதந்திர முயற்சியை ஒடுக்குவதற்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு இந்தியாவின் மீதுள்ள பிடிப்பை இறுக்குவதாக இருப்பதுடன் கோரமான யுத்தத்தில் கொண்டு வந்து விட்டு அந்த யுத்தத்தில் இந்தியாவை ஏகாதிபத்திய ஆசை பிடித்த அந்நியநாட்டினரின் ஒரு கருவியாக செய்துவிடமுயற்சி நடக்கக் கூடும் என இக்காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது.

அக்கம் பக்கங்களிலுள்ள தேசத்தினருடன் எவ்விதச் சச்சரவுமின்றி அவர்களுடன் சவுஜனியமாக இருந்துவர இந்திய மகாஜனங்கள் விரும்புகிறார்களென்பதை இக் காங்கிரஸ் தெரிவித்துக் கொள்ளுவதுடன், அத்தகைய யுத்தத்தில் கலந்துகொள்ளுவதா, வேண்டாமாவென்பதை நிர்ணயித்துக்கொள்ளும் சுதந்திரம் இந்திய மகாஜனங்களுடையதே யென்று வற்புறுத்துகிறது.

இந்த யுத்த ஸன்னத்தங்களை நிறுத்திவிட வேண்டுமென்று இக்காங்கிரஸ் கோருகிறது. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் யுத்தத்திலிறங்கி தங்களுடைய ஆசையைப் பூர்த்திசெய்துவித்துக் கொள்ளுவதற்காக இந்தியாவை உபயோகித்துக் கொள்ள விரும்பினால், அந்த யுத்தத்தில் சம்பந்தப்படாமலும், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுடன் ஒத்துழைக்காமலுமிருக்க வேண்டியது இந்திய மகாஜனங்களின் கடமையாகுமென்று இந்தக் காங்கிரஸ் அறிவித்திருக்கிறது.

7. நாகபுரி ஆயுத சத்தியாக்கிரக இயக்கத்தின் தலைவரான ஸ்ரீமான் அவாரியும் அவருடைய சகாக்களும் செய்துவரும் வீரத்தனமான போராட்டத்தை இச்சபை பாராட்டுவதுடன் 78-வது நாள் உண்ணாவிரதமிருக்கும் ஸ்ரீ அவாரியிடம் இக்காங்கிரஸ் அனுதாபத்தைத் தெரிவிக்கிறது.

8. இந்தியாவின் சுய நிர்ணய சுதந்திரத்தை முற்றிலும் அசட்டை செய்து பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அரசியல் விசாரணைக் கமிஷனை நியமித்திருப்பதால், ஒவ்வொருபடியிலும், ஒவ்வொரு விதத்திலும் கமிஷனைப் பஹிஷ்கரிப்பது ஒன்றுதான் சுயமரியாதைக் கேற்ற வழியாகுமென்று காங்கிரஸ் தீர்மானிக்கிறது. முக்கியமாக,

(அ) இந்திய மக்களும், தேசத்திலுள்ள காங்கிரஸ் ஸ்தாபனங்களும் (1) கமிஷன் இந்தியாவுக்கு வருகிற தினத்தில் மகாஜனங்களைக் கூட்டி ஆட்சேப ஆரவாரம் செய்யும்படியும், கமிஷன் எந்தெந்தப் பட்டணங்களுக்கு வருகிறதோ அங்கு அதேமாதிரி ஆரவாரம் செய்யும்படியும், (2) கமிஷனைத் திறமையாகப் பஹிஷ்கரிக்கும்படி எல்லாவகையான ராஜீய அபிப்பிராயமுடைய இந்தியர்களையும் தூண்டுவதற்கு உக்ரமான பிரசாரத்தினால் பொது ஜன அபிப்பிராயத்தை உருப்படுத்தும்படியும் காங்கிரஸ் ஆக்ஞாபிக்கின்றது.

(ஆ) இந்திய சட்டசபைகளிலுள்ள உத்தியோகஸ்த ரல்லாதவர்களும், ராஜீயக் கக்ஷித் தலைவர்களும், சமூகத் தலைவர்களும், மற்றனைவரும் கமிஷன் முன்பாக சாட்சி கொடுக்சக் கூடாதென்றும், பகிரங்கமாகவோ அந்தரங்கமாகவோ கமிஷனோடு ஒத்துழைக்கக் கூடாதென்றும், கமிஷன் அங்கத்தினருக்கு நடக்கக்கூடிய உபசாரங்கள் விருந்துகளுக்குப் போகவோ, அவற்றில் கலந்து கொள்ளவோ கூடாதென்றும் காங்கிரஸ் ஆக்ஞாபிக்கிறது.

(இ) இந்திய சட்ட சபைகளிலுள்ள உத்தியோகப் பற்றில்லாதவர்கள், கமிஷன் சம்பந்தமாக செலக்டு கமிட்டிகளை நியமிப்பதற்கு சாதகமாக ஓட்டுச் செய்யவோ, அக்கமிட்டிகள் ஏற்பட்டால் அவற்றில் அலுவல் பார்க்கவோ கூடாதென்றும், கமிஷன் வேலை சம்பந்தமாகக் கொண்டுவரக் கூடிய மான்ய இனங்களை அல்லது இதர பிரேரணைகளை நிராகரித்துவிட வேண்டுமென்றும் காங்கிரஸ் ஆக்ஞாபிக்கின்றது.

(ஈ) சட்ட சபைகளிலுள்ள உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தினர் தங்களுடைய ஸ்தானங்கள் காலியாகப் போகாமலிருக்கவும், பஹிஷ்காரத்தைத்திறமையாக பலனுறும் படி நடத்துவதற்கும், மந்திரிகளை ஒழிப்பதற்கும், இந்தியாவின் நன்மைக்கு விரோதமெனக் காரியக் கமிட்டி கருதும் காரியங்களை எதிர்க்கவும் நீங்கலாக, மற்றப்படி சட்டசபைக் கூட்டங்களுக்குப் போகக் கூடாது.

(உ) பஹிஷ்காரத்தைத் திறமையாகவும் பூரணமாகவும் நடத்திவைக்க இதர ஸ்தாபனங்கள், கக்ஷிகள் இவர்களுடைய ஒற்றுமையைச் சாத்தியமான சமயங்களில் பெறக் காரியக் கமிட்டிக்கு அதிகாரங் கொடுக்கிறது.

9. கவர்ன்மெண்டார் பர்மாவை இந்தியாவினின்றும் பிரிக்கும் கொள்கையை இக்காங்கிரஸ் நிராகரிக்கிறது. அத்துடன் வடகிழக்கு எல்லை மாகாணத்தை யுண்டுபண்ணுவதை அழுத்தமாகக் கண்டிக்கிறது.

இந்தியர்களும் பர்மியர்களும் தங்கள் பரஸ்பர நன்மைகளை உத்தேசித்து எல்லா முறைகளாலும் இருவருக்குள்ளும் ஒற்றுமையை உண்டு பண்ண முயற்சிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறது.

10. பூரண தேசிய சுயேச்சையே இந்திய மகாஜனங்களின் லட்சியம் என இக்காங்கிரஸ் தீர்மானிக்கிறது.

11. நிரபராதிகளானவர்களையும், காங்கிரஸ் ஊழியர்களையும் வங்காள ரெகுலேஷன் படியும் வங்காள கிரிமினல் சட்டத்திருத்தச் சட்டத்தின் படியும் எல்லையில்லாத காலம் விசாரணையின்றிச் சிறையிலடைத்து வைத்திருக்கும் கவர்ன்மெண்டின் கொள்கையை இந்தக் காங்கிரஸ் அழுத்தமாகக் கண்டித்து மேற்கண்ட அடக்குமுறை காரணமாகக் கஷ்டப்பட்டவர்களுக்கும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறவர்களுக்கும் தன்னுடைய வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது. விசாரணையின்றிப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறவர்களையும், கிரிமினல் சட்டத் திருத்தச் சட்டத்தின்படி ஸ்பெஷல் கோர்ட்டுகளால் தண்டிக்கப்பட்ட ராஜீயக் கைதிகளையும் உடனே விடுதலை செய்துவிட வேண்டுமென்று இந்தக்காங்கிரஸ் கோருகிறது. வங்காள ரெகுலேஷன்படி ஸர்தார் சாந்துசிங்கைக் கைது செய்து சிறையில் வைத்திருப்பதை இந்தக் காங்கிரஸ் அழுத்தமாகக் கண்டிக்கிறது.

12. ஆப்பிரிக்கா இந்தியர் பற்றிய தீர்மானம் அடுத்த வார மித்திரன் பார்க்கவும்.

13. இந்து முஸ்லீம் ஒற்றுமைத் தீர்மானம் அடுத்த வார மித்திரன் பார்க்கவும்.

14. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி பிரிட்டிஷ் சாமான் பகிஷ்கார இயக்கம் ஆரம்பிக்க வேண்டுமென்று தீர்மானித்திருப்பதை இக்காங்கிரஸ் அங்கீகரிக்கிறது. இந்தக் கொள்கைப் பிரகாரம் நடப்பதற்குக் காங்கிரஸின் சில மாகாணங்களும் தங்கள் பிரதேசங்களில் பகிஷ்கரிக்கக் கூடிய பிரிட்டிஷ் சாமான்கள் ஜாபிதா ஒன்று தயாரித்து அதற்கேற்ற பிரசாரம் செய்து பகிஷ்காரம் உதைக்குமாறு செய்யவேண்டுமென்று தீர்மானிக்கிறது.

15. இந்தியாவிலுள்ள எல்லாக் கக்ஷியினரும் சேர்ந்து ஒரு சுயராஜ்யத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டுமென்று பொது ஜன அபிப்பிராயமிருப்பதாலும் இது சம்பந்தமாகப் பலர் அனுப்பியுள சிபார்சுகள் சம்பந்தமாகவும் தேசத்திலுள்ள ராஜீயக் கக்ஷிகள், தொழிலாளர், வர்த்தகர் முதலிய சர்வ கக்ஷியினருடனும் கலந்து இந்தியாவின் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய சுயராஜ்யத் திட்ட மொன்றைத் தயாரித்து வருகிற மார்ச்சு மாதத்திற்குள் சர்வ கக்ஷி மகாநாடொன்றை டில்லியில் கூட்டி அம் மகா நாட்டின் அங்கீகாரத்திற்கு அத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று காரியக் கமிட்டியை இக் காங்கிரஸ் கேட்டுக் கொள்கிறது.

16 அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியங்கத்தினர்கள் டை கமிட்டிக் கூட்டமாவது, காரியக் கமிட்டிக் கூட்டமாவது நடை பெறுவதற்குமுன் வருடம் ஒன்றுக்கு ரூ 10 வீதம் செலுத்த வேண்டுமெனத் தீர்மானிக்கிறது.

17. இந்திய சமஸ் தானங்களில் பொறுப்புள்ள ஆட்சியை ஏற்படுத்துவதுதான் அரசாளும் மன்னருக்கும் ஆளப்படும் பிரஜைகளுக்கும் நல்லதென்று இக்காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது.

18. காரியதரிசி பதவியிலிருந்து விலகும் ஸ்ரீமான் எ. ரங்கசாமி அய்யங்கார், ஸ்ரீமான் வல்லபாய்படேல் இருவரும் சென்ற வருஷம் காங்கிரஸ் காரியதரிசிகளாயிருந்து செய்துள்ள அரிய சேவையை இக் காங்கிரஸ் பாராட்டுகிறது.

ஸ்ரீ புரோகி, பண்டித ஜாவேகிலால் நேரு, ஸ்ரீ சுபாஸ் சந்திர போஸ் இவர்களைப் புது வருடத்திற்குக் காரியதரிசிகளாகவும், சேத்ஜம்னுலால் பஜாத், சேதஜப் ஜிவன் இவர்களைப் பொக்கிஷதார்களாகவும் இக் காங்கிரஸ் நியமிக்கிறது.

19. அடுத்தகாங்கிரஸ் கல்சத்தாவில் கூட்டுவதென இக்காங்கிரஸ் தீர்மானிக்கிறது.

---

முறுத்தியும் ஏமாற்றியும் நிறை வேற்றிவிட்டார்கள்.

மூன்றும் நாள் நடவடிக்கைகளும் முறையே நிறைவேறிவிட்டன. ஜனங்களும் தலைவர்களும் தத்தம் ஊர்களுக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரம் என்றுங் காணாத காட்சியைக் கண்டதென்று எண்ணி மகிழ்வாரும், திரு. எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார் எப்பாடுபட்டேனும் இப்புதுமையைக் காட்டியுள்ளாரென்று அவருக்கு ஆசி கூறுவோரும், காங்கிரஸ் நகர் ஐயங்கார் அக்கிரகாரமாயிருந்த தென்பாரும், தீர்மானங்களையும் நடவடிக்கைகளையும் ஆழ்ந்து கவனித்தவர்கள் இதென்ன பார்ப்பன ராஜ்யமாவென்பாரும் பலருளர்.

பொதுவாகக் கூட்டங்களையும் ஆடம்பரங்களையும் பார்த்து ஜனங்கள் மிக ஆச்சரியப்படத்தான் கூடும். எனெனில், 1914-ௗ பூபேந்திரநாத்வசு அவர்கள் தலைமையில் நடந்த காங்கிரஸ் அவ்வளவு ஆடம்பரமின்றி அமைதியுடன் நடைபெற்றிருக்கிறது. ஆனால் காக்கிநாடாவிலும், பெல்காமிலும் நடந்த காங்கிரஸ்களையும், ஜனக் கூட்டங்களையும் ஜனங்கள், மனோ உணர்ச்சிகளையும், கதர் காக்ஷிகளையும் நேரில் பார்த்தவர்கள் அவைகளுக்கு இச்சென்னைக் காங்கிரஸ் பிச்சை கொடுக்கக் காணுதென்று தான் சொல்லக்கூடும். தைரியமாய் சுயராஜ்யம் பெறவேண்டுமென்றில்லாவிடினும், தந்திரமாய் சுயராஜ்யம் பெறுவோமென்றுவது சென்னைக் காங்கிரஸ் உள்ளார்த்தங்கள் எல்லா உள்ளத்திலும் உறுத்துவதாகக் காணும். காட்சியின் மாட்சிக்கு மகிழ்வோமாக.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹம்.

மகாத்மா காந்தி எழுதியது.

### முதல் அத்தியாயம்.

#### தேச அமைப்பு.

ஆப்பிரிக்கா உலகின் மிகப் பெரிய கண்டங்களில் ஒன்று. இந்தியா ஒரு தேசம் அன்றென்றும், ஒரு கண்டமே யென்றும் சொல்லப்படுகின்றது. ஆனால் விஸ்தீரணத்தை மட்டும் உத்தேசித்தால் ஆப்பிரிக்கா நான்கு அல்லது ஐந்து இந்தியாக்களுக்குச் சமமாகும். இந்தியாவைப்போல் ஆப்பிரிக்காவும் பெரும்பாலும் கடலால் சூழப்பட்ட தீபகற்பம். ஆப்பிரிக்கா உலகிலேயே மிகவும் உஷ்ணமான பிரதேசம் என்று பொதுவாக வெளி நாடுகளில் ஓர் அபிப்பிராயம் பரவியிருக்கிறது. இதில் ஓரளவு உண்மையில்லாமலில்லை. பூமத்திய ரேகை ஆப்பிரிக்கா மூலமாய்ச் செல்கிறது. இந்த ரேகையைச் சார்ந்துள்ள பிரதேசங்களின் தீவிர வெப்பத்தைப்பற்றி இந்தியாவிலுள்ளவர்கள் எண்ணிப் பார்க்கவும் முடியாது. ஒருக்கால், இந்தியாவின் தெற்குக் கோடியில் உள்ள வெப்ப நிலையிலிருந்து பூமத்திய ரேகைக் கருகிலிருக்கக் கூடிய உஷ்ண நிலையை ஒருவாறு ஊகித்தறியலாம். ஆனால் தென்னாப்பிரிக்கா விஷயம் முற்றிலும் வேறு. அது பூமத்திய ரேகையிலிருந்து வெகுதூரத்தில் இருக்கிறது. அங்கே உடல் சுகத்துக் கேற்ற, மிதமான சீதோஷ்ண நிலை உள்ள பல பிரதேசங்கள் இருக்கின்றன. அப்பிரதேசங்களில் ஐரோப்பியர்கள் குடியேறிச் சுகமாக வாசம் செய்ய முடியும். இந்தியாவிலோ இஃது இயலாத காரியம். மற்றும், தென்னாப்பிரிக்காவில் திபேத், காஷ்மீர் போன்ற உயரமான பிரதேசங்களும் இருக்கின்றன. ஆனால் திபேத்தைப்போல் அவை பத்தாயிரம், பதினாயிரம் அடி உயரம் செல்வதில்லை. ஆகலின் ஈரமில்லாத காற்றும், சகிக்கக்கூடிய குளிரும் பொருந்தியிருக்கின்றன. தென்னாப்பிரிக்காவில் சில விடங்கள், க்ஷயரோகிகள் குணம் பெறுவதற்குரிய சிறந்த சுகவாசஸ்தலங்கள் என்றுபெயர் பெற்றிருக்கின்றன. தென்னாப்பிரிக்காவின் பொன் நகரமாகிய ஜோகானிஸ்பர்க் இத்தகைய சுகவாசஸ்தலங்களில் ஒன்று. இப்போது அந்நகரம் அமைந்திருக்கும் இடம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு காய்ந்த புல் மூடிய பாழும் பிரதேசமாய்க் கிடந்தது. தங்கக் கனிகள் கண்டுபிடிக்கப்பட்டதும் ஒன்றன்பின் ஒன்றாய் இந்திர ஜாலத்தால் எழுந்தவைபோல் வீடுகள் தோன்றலாயின. இன்றைய தினம் அங்கு அழகிய பெரிய கட்டடங்களைக் காணலாகும். அந்நகரின் செல்வர்கள், ஐரோப்பாவிலும், தென்னாப்பிரிக்காவிலும் உள்ள வளத்திற் சிறந்த பிரதேசங்களிலிருந்து மரத்துக்கு ஒரு பவுன் விலையில் கொடுத்து ஏராளமான மரங்கள் தருவித்து நாட்டியிருக்கிறார்கள். பூர்வ சரித்திரம் அறியாத பிரயாணி ஒருவன் அந்நகர் சென்றால் அம்மரங்கள் அங்கேயே எப்போதும் இருந்தவை என்று எண்ணிக்கொள்வான்.

தென்னாப்பிரிக்காவின் எல்லாப் பகுதிகளையும் பற்றி விவரிக்கும் உத்தேசம் எனக்கில்லை. நமது சரித்திரத்துடன் சம்பந்தப்பட்ட பகுதிகளைப் பற்றிமட்டும் கூறி நிறுத்திக் கொள்வேன், தென்னாப்பிரிக்காவில் ஒரு பகுதி போர்ச்சுகீசியரின் ஆதிக்கத்திலும், மற்றப் பகுதி முழுதும் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலும் இருக்கின்றன. போர்ச்சுகீசியரின் கீழுள்ள பகுதிக்கு டிலாகோ குடா என்று பெயர். இந்தியாவிலிருந்துவரும் கப்பல்கள் தென்னாப்பிரிக்காவில் முதன் முதலில் தங்க வேண்டிய துறைமுகம் இதுவேயாகும். இங்கிருந்து தெற்கே சென்றால் நேட்டாலுக்கு வருகிறோம். இது முதலாவது பிரிட்டிஷ் குடியேற்ற நாடு. இதன் முக்கிய துறைமுகத்துக்குப் போர்ட் நேட்டால் என்று பெயர். ஆனால் டர்பன் என்ற பெயரே தென்னாப்பிரிக்கா முழுவதிலும் அதற்கு வழங்கிவருகிறது. நேட்டாலில் பெரிய நகரம் டர்பன்தான். ஆனால் தலைநகரம் பீட்டர் மேரிட்ஸ்பர்க். இஃது உள் நாட்டில் டர்பனிலிருந்து அறுபது மைல் தூரத்தில் கடல் மட்டத்துக்கு 2000 அடி உயரத்தில் அமைந்திருக்கிறது. டர்பன் சீதோஷ்ண நிலை பம்பாயின் சீதோஷ்ண நிலையை ஓரளவு ஒத்ததாகும். இன்னும் சிறிது குளிர் அதிகம். நேட்டாலைத்தாண்டி உள்நாட்டுக்குச்சென்றால் டிரான்ஸ் வாலுக்கு வந்து சேர்கிறோம். டிரான்ஸ்வாலின் தங்கக்கனிகளே உலகிற்கு அதிகமான தங்கத்தைத் தருகின்றன. சில வருஷங்களுக்கு முன் வைரக்கனிகளும் அங்கே கண்டு பிடிக்கப்பட்டன. உலகின் மிகப் பெரிய வைரம் இக்கனிகளிலேயே கண்டெடுக்கப் பட்டது. 'குலினன்' என்னும் அவ்வைரம், அஃது எடுக்கப்பட்ட கனியின் சொந்தக்காரர் பெயரைத் தாங்கிற்று. அதன் நிறை 12,000 தானிய எடை. அதாவது ஏறக்குறைய 1¼ ராத்தல். 'கோஹினூர்' என்னும் பெயர் பெற்ற இந்திய வைரம் தற்போது 400 தானிய எடையே இருக்கிறது. ருஷிய சக்ரவர்த்தியின் ஆபரணங்களைச் சேர்ந்த 'ஆர்லாப்' என்னும் வைரத்தின் நிறை 800 தானிய எடை.

தங்கக் கனித் தொழிலுக்கு ஜோகானிஸ்பர்க் மத்தியஸ்தலமாயினும், அதனருகில் வைரக்கனிகளும் உளவாயினும், டிரான்ஸ்வாலின் தலைநகரம் அஃதன்று. ஜோகானிஸ் பர்க்கிலிருந்து 36 மைல் தூரத்திலுள்ள பிரிட்டோரியாவே தலை நகரமாகும். பிரிட்டோரியாவில் உத்தியோகஸ்தர்கள், அரசியல் வாதிகள், அவர்களைத் தொடர்ந்து வருவோர் இவர்களையே அதிகம் காணலாம். ஆகலின் ஜோகானிஸ் பர்க்குடன் ஒப்பிடும்போது பிரிட்டோரியா அமைதியுள்ள நகரம் என்றே சொல்லவேண்டும். இந்தியாவில் அமைதி குடி கொண்ட ஒரு கிராமம் அல்லது சிறு பட்டணத்திலிருந்து பம்பாய்க்குச் செல்லும் ஒருவன் அவ்விடத்துச் சந்தடியையும், பல வகையான ஒலிகளையும் கேட்டுப் பிரமிப்படைவது போலவே பிரிட்டோரியாவிலிருந்து ஜோகானிஸ்பர்க்குக்கு வருவோர் பிரமிப்பர். ஜோகானிஸ் பர்க் நகர்வாசிகள் நடப்பதே யில்லையென்றும், அவர்கள் ஓடிய வண்ணமிருக்கிறார்களென்றும் கூறுதல் மிகையாகாது. ஒவ்வொருவரும் மிகக் குறைந்த காலத்தில் மிக அதிகமான பொருளைச் சேர்ப்பது எப்படி என்பதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்தியிருப்பதால் வேறெவ் விஷயத்தையும் பற்றிச் சிந்திக்க எவருக்கும் அவகாசம் கிடையாது. டிரான்ஸ் வாலைக் கடந்து இன்னும் மேற்கு நோக்கிச் சென்றோமானால் ஆரஞ்சு பிரீஸ்டேட் அல்லது ஆரஞ்சியா என்றழைக்கப்படும் மாகாணத்தை யடைவோம். அதன் தலைநகரம் புளோம் பாண்டீன் என்பது. அஃது அமைதி குடிகொண்ட சிறு பட்டணம். டிரான்ஸ் வாலில் உள்ளதுபோல் ஆரஞ்சியாவில் கனிகள் கிடையா. இங்கிருந்து சில மணி நேரம் ரயிலில் பிரயாணம் செய்தால் கேப்காலனி எல்லையை அடைகிறோம். தென்னாப்பிரிக்கா குடியேற்ற மாகாணங்களில் கேப் காலனியே மிகப் பெரியதாகும். அதன் தலை நகரம் கேப்டவுன். அம்மாகாணத்தின் பெரிய துறைமுகப் பட்டணமும் அதுவேயாகும். அந்நகர் நன்னம்பிக்கை முனை-கேப் ஆப் குட்ஹோப்பில் அமைந்திருக்கிறது. இம்முனை இப்பெயர் பெற்ற காரணம் வருமாறு:—அக்காலத்தில் ஐரோப்பா தேசத்தார் இந்தியாவுக்குச் செல்ல சுலபமான ஒரு புதிய வழியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று பெரு முயற்சி செய்துகொண்டிருந்தனர். போர்ச்சுகல் தேசத்துக் கப்பல் ஒன்று மேற்படி முனையை முதன் முதலில் அடைந்ததும் இனி இந்தியாவுக்குப் போகச் சுலபமான வழி கண்டுபிடித்து விடலாமென்று போர்ச்சுகல் தேச மன்னன் ஜான் என்பான் நம்பிக்கை கொண்டான். எனவே அவன் மேற்படி முனைக்கு அப்பெயர் அளித்தான்.

மேற்சொன்ன நாலு பெரிய பிரிட்டிஷ் குடியேற்ற மாகாணங்களை யல்லாமல் பிரிட்டிஷ் பாதுகாப்பிற்குட்பட்ட பல பிரதேசங்கள் இருக்கின்றன. இப்பிரதேசங்களில், ஐரோப்பியர்கள் வருவதற்கு முன்பே குடிபுகுந்த சாதியார் வசித்து வருகின்றனர்.

தென்னாப்பிரிக்கா சிறப்பாக விவசாய தேசமேயாகும். வேறெந்தத் தொழிலையும் விட விவசாயத்துக்கே அஃது எல்லாவகையாலும் ஏற்றது. அதன் சில பகுதிகள் மிகவும் வளம் பொருந்தியவை. பயிராகும் முக்கிய தானியம் சோளம். அதிக உழைப்பின்றியே அது பயிர் செய்யப்படுகிறது. தென்னாப்பிரிக்கா நீகிரோவர்களுக்கு அதுவே முக்கிய உணவுப் பொருள். சில பகுதிகளில் கோதுமையும் சாகுபடி செய்யப்படுகிறது. தென்னாப்பிரிக்கா பழ வர்க்கங்களுக்குப் பெயர்போனதாகும். பல வகையான சிறந்த வாழைப் பழங்கள், பப்பாளிப் பழங்கள், மாதுளம் பழங்கள் முதலியவை நேட்டாலில் ஏராளமாக உற்பத்தியாவதால் ஏழையிலும் ஏழைக்கும் அவை கிடைக்கக் கூடியவையாயிருக்கின்றன. மற்றும், நேட்டாலிலும், பிற மாகாணங்களிலும், ஆரஞ்சுப்பழங்களும் பிற உயர்ந்த பழவகைகளும் நிரம்ப விளைவதால் கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் சாதாரண உழைப்பின்மீது அவற்றைப் பெறுதல் சாத்தியமாயிருக்கிறது. கேப்காலனி பச்சைத் திராட்சைப் பழங்களுக்குப் பெயர்போனது. உலகில் வேறெந்த இடத்திலும் அவ்வளவு நல்ல திராட்சைப் பழங்கள் உற்பத்தியாவதில்லை. திராட்சைப் பழத்துக்குரிய காலத்தில் மிக வறிய மனிதன் கூட வேண்டிய அளவு பெறும்படியாக அவை அவ்வளவு மலிவாயிருக்கும். இந்தியர்கள் வசிக்குமிடத்தில் மாம்பழம் இல்லாமலிருக்க முடியுமா? தென்னாப்பிரிக்கா சென்ற இந்தியர்கள் மாமரமும் பயிர் செய்தார்கள். எனவே, மாம்பழங்களும் கிடைக்கின்றன. இவற்றுள் சிலவகை பம்பாயில் கிடைக்கும் சிறந்த மாம்பழங்களுடன் போட்டியிட முடியும். அவ்வளங்கொழிக்கும் நாட்டில் கறி காய்களுக்கும் குறைவில்லை. இந்தியாவின் கறி காய்கள் எல்லாம் அந்நாட்டிலும் இந்தியர்களால் பயிர் செய்யப்படுகின்றன என்று சொல்லலாம்.

கால் நடைகளும் ஏராளமாக வளர்க்கப் படுகின்றன. அங்கேயுள்ள பசுக்களும் எருதுகளும் இந்தியாவிலுள்ளவற்றைவிட பலமும், புஷ்டியும் உள்ளவை. பசுவைப் பாது காப்பதாகச் சொல்லிக்கொள்ளும் இந்தியாவில், நாட்டுமக்களைப் போலவே பசுக்கள் காளைகள் பல இளைத்து மெலிந்திருப்பது கண்டு நான் வெட்கித் துயரக் கண்ணீர் வடித்திருக்கிறேன். ஏறக்குறைய தென்னாப்பிரிக்கா முழுவதும் நான் பிரயாணம் செய்திருக்கிறேனாயினும், இளைத்து மெலிந்த பசு அல்லது எருது ஒன்றையாவது கண்டதாக எனக்கு ஞாபகமில்லை. மேற்படி நாட்டிற்கு இவ்வளவு வளங்களையும் அருளிய இயற்கைத் தேவி அங்கே தன் பரிபூரண வனப்புடன் காட்சியளிக்கவும் தவறிவிடவில்லை. டர்பன் இயற்கைக் காட்சி மிக அழகிய தொன்றெனக் கருதப்படுகிறது. ஆனால் இதனையும் கேப்டவுன் மிஞ்சி விடுகிறது. அதிக உயரமேனும் அதிகத் தாழ்வேனும் இன்றி மத்திய தரமாயிருக்கும் டேபிள் மலையின் அடிவாரத்தில் கேப்டவுன் அமைந்திருக்கிறது. தென்னாப்பிரிக்காவைக் காதலிக்கும் புலமை வாய்ந்த பெண்மணி ஒருவர் தமது கவிதை ஒன்றில் உலகில் தாம் பார்த்த மலையெதுவும் டேபிள் மலைக்கு ஈடாகாதென்று சொல்கிறார். இது மிகைப்படுத்திக் கூறப்பட்டதாயிருக்கலாம். நான் அப்படித்தான் நினைக்கிறேன். ஆனால் அவர் கூறியிருக்கும் காரணங்களில் ஒன்று என் மனதைக் கவர்ந்தது. கேப்டவுன் வாசிகளுக்கு டேபிள் மலை ஓர் உற்ற தோழனாயிருப்பதாக அவர் கூறுகிறார். அதிக உயரமான தன்றாதலால் அதைப் பார்ப்போர் அச்ச முறுவதில்லை. மக்கள் வெகு தூரத்திலிருந்து அதைப் பூஜிக்கவேண்டியதில்லை. அம்மலையிலேயே வீடுகட்டிக்கொண்டு வாழலாம். அது கடற்கரையிலிருப்பதால், அதன் அடிவாரத்தில் கடலின் தெளிந்த நீர் இடைவிடாது மோதிக் கொண்டேயிருக்கிறது. பாலர்களும் விருத்தர்களும், ஆண்களும் பெண்களும் பயமென்பதின்றி அம்மலை முழுவதும் சென்று உலாவுகிறார்கள். தினந்தோறும் ஆயிரக்கணக்கான ஜனங்களின் குரல்கள் அம்மலையில் எதிரொலி செய்கின்றன. அதன்மீது வளர்ந்துள்ள உயரிய விருட்சங்களும், மணம் வீசும் மலர்களும், பலவகை வர்ணக்காட்சிகளும் அம்மலைக்கு ஓர் அற்புத மோகனத்தைத் தருவதால், அதை எவ்வளவு நேரம்பார்த்தாலும் எவ்வளவு தூரம் சுற்றினாலும் அலுப்பே தோன்றாது.

கங்கை, சிந்துபோன்ற பெரிய நதிகள் தென்னாப்பிரிக்காவில் இல்லை. அங்குள்ள ஒரு சில நதிகளும் சின்னவையேயாம். நதி ஜலம் அந்நாட்டில் பல இடங்களுக்கு எட்டவே முடியாது. பீட பூமிகளுக்குக் கால்வாய் வெட்டித் தண்ணீர் கொண்டுபோதல் இயலாத காரியம். மற்றும், பெரிய நதிகளே இல்லாதபோது கால்வாய்கள் எப்படித் தோண்டுவது? ஆகவே, தென்னாப்பிரிக்காவில் இயற்கை நீர்வளம் அமையாத இடங்களிலெல்லாம் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுக் காற்றாடி இயந்திரங்கள், நீராவி இயந்திரங்கள் மூலம் வயல்களுக்குத் தண்ணீர் இறைக்கப்படுகிறது. விவசாயத்துக்கு அரசாங்கத்தார் நிரம்ப ஆதரவு செய்கிறார்கள். அவர்கள் விவசாயிகளுக்கு யோசனைகள் சொல்ல விவசாய நிபுணர்களை அனுப்புகிறார்கள். மாதிரிப் பண்ணைகளை நடத்திப் பரிசோதனைகள் செய்கிறார்கள். நல்ல கால்நடைகளும் விதைகளும் தருகிறார்கள். சொற்பச் செலவில் கிணறுகள் தோண்டிக் கொடுத்துத் தொகையைப் பல தவணைகளில் பெற்றுக் கொள்கிறார்கள். வயல்களைப் பாதுகாப்பதற்கு இரும்பு முள்வேலிகள் எடுத்துத் தருகிறார்கள்.

இந்தியா பூமத்திய ரேகைக்கு வடக்கிலும், தென்னாப்பிரிக்கா அந்த ரேகைக்குத் தெற்கிலும் இருப்பதால் அங்கே சீதோஷ்ண நிலைகள் இங்குள்ளவற்றிற்கு நேர் மாறாக இருக்கும். ருதுக்களும் அவ்வாறே. உதாரணமாக நமக்கு இங்கே கோடை காலமாயிருக்கும்போது தென்னாப்பிரிக்காவில் குளிர்காலமாயிருக்கும். அங்கே மழை குறிப்பிட்ட காலத்தில் பெய்வதென்பது கிடையாது. மழை எப்போது வேண்டுமானாலும் பெய்யும்; பெய்யாமலுமிருக்கும். வருஷத்தில் சராசரி மழை 20 அங்குலத்துக்கு மேல் இல்லை.

---

## அதிஷ்டம்!

நாளது மார்கழி மீ 1 உ கடலாடி பிரபல வியாபாரி ஸ்ரீ கு. சு. ஷண்முகநாடார் என்போர் தூத்துக்குடி முத்துச் சிலாபத்துக்குப் போயிருந்தார். முதற் றடவை சிப்பிகள் வாங்கி அறுத்ததில் 50 ரூபாய்க்கு ஒரு முத்துக் கிடைத்து விற்பனை செய்யப்பட்டது. பின்னும் அதிஷ்டத்தைப் பார்ப்போம் என்ற நோக்கத்துடன் மறுபடியும் 4 அணாவுக்குச் சிப்பிகள்வாங்கி அறுவை செய்து பார்த்ததில் ஒரு முத் ரூ து700-0-0 பெறக்கூடியதாகக் கிடைத்தது. அது இன்னும் விற்பனையாகவில்லை. பெரிய சேட்டுகள் இன்னும் வராதபடியால் சின்ன வியாபாரிகள் ரூ 580 வரைக்கும் கேட்கிறார்கள். சென்ற வருடத்தில் நடந்த சிலாபத்தைப் பார்க்கிலும் இப்போது சரியான முத்துக்களாகவும், வாங்கிய தொகைக்கு மோசம் வரக்கூடாதவாறான சன்னங்களாகவும் அகப்படுகின்றன.

கே. எஸ். சுந்தரபாண்டியன்,
கடலாடி.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## அன்பே சிவம்!

### அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசார சபையிலிருந்து)

நெடிய கடல் சூழ்ந்த இவ்வுலகின் கண்ணே மானிடராய்ப் பிறந்த நமது வாழ்க்கையானது அன்பின்றி நடத்தப்படுமாயின் வெகுகாலத்துக்கு முன்னமேயே மனித ஜாதியே அழிந்து போயிருக்குமென்பதை யூகித்தறிந்து சொல்லலாம். அவ்வித அழிவின்றி யிருப்பதாலேயே, நம்மிடத்தில் அன்பு என்ற ஒரு தெய்வத்தன்மை இருக்கிறதென்பது தெளிவாகிறது.

ஆயின் அவ்வன்பானது எவ்விதம் நமக்குள்ளிருந்து வருகிறதெனின், சுயநலத்தேட்டத்திலேயே இருந்து வருகிறது. முக்கியமாய் நமது குழந்தைகள், சுற்றத்தார், தாய், தகப்பன் இவர்களிடத்திலும், சிநேகிதர், ஒரே நோக்கத்தில் முனைந்து வேலை செய்வோர், தன் காரியத்துக்கு உதவிசெய்வோர் முதலியவர்களிடத்திலும் சமயம்போல மிகுந்தோ குறைந்தோ வெளிப்படுகிறது.

இவ்விதம் குறுகிய நோக்கத்துடன் செலுத்தப்படும் அன்பானது, இம்மையில் சில சௌகரியங்களை வளர்ப்பது போல் தோற்றினாலும், சுயநலத்தோடு செலுத்தப் படுவதாதலால் அதற்கு விரோதமான காரியங்கள் நிகழ்ந்த போது அதுவே துன்பந் தருவதாயும் ஆய்விடுகிறது.

உதாரணமாக, ஸ்ரீ ராமபிரான் பிதுர் வாக்ய பரிபாலனார்த்தம் கானகஞ் சென்றிருந்தபோது இராவணனின் சகோதரியாகிய சூர்ப்பநகையானவள் ஸ்ரீ ராமனுடைய வடிவத்தைக் கண்டு மயங்கி அவர் மீது தனது காதல் என்னும் அன்பைச் செலுத்தினாள். ஸ்ரீ ராமபிரானோ ஏகபத்னிவிரதன்; ஆகையால் அவள் கோரிக்கை நிறைவேறவில்லை. இதனால் அவள் இலட்சுமண பெருமானால் அவமானப்படும்படி நேர்ந்தது. அதுமாத்திரமா! பிறர் உடமை என்பதைக் கொஞ்சமும் மதியாது, சீதா பிராட்டிக்கே தீங்குசெய்யக் கருதினாளல்லவா? சுயநலத்தேட்டத்தால் செலுத்தப்படும் அன்பானது சில சமயங்களில் இத்தகைய பலன்களையே தரும் என்பது திண்ணம். இதனால் வந்த பழியும் அழிவுமே இராமாயணத்தின் முக்கிய சரித்திரம்.

ஆகையால் மனிதராய்ப் பிறந்த நாம் குறுகிய தன்மையில் நமது அன்பைக் கட்டுப்படுத்தாமல் விரிந்த மார்க்கத்தில் செலுத்தி, எவ்வுயிரும் எவ்விடத்தும் துன்பமடையாது காப்பாற்றி, பிறஜீவராசிகளின் வாழ்க்கையே தன் வாழ்க்கையெனக் கொண்டு ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடித்து, புலாலுணவை விடுத்து, சத்துவ குணத்தை விருத்திசெய்யும் ஆகாரங்களையே புசித்து, உண்மையான தரும மார்க்கத்தையும் தெய்வ வழிபாட்டையுங் கடைப்பிடித்து நடப்பதே கடமையாகும். அவ்விதம் சகல ஜீவராசிகளிடத்தும் செலுத்தும் அன்பே சிவசொரூபமாகும். இதுபற்றியே திருமூலர் திருமந்திரத்திலும்

அன்புஞ்சிவமு மிரண்டென்பர் அறிவி [லார்
அன்பேசிவமாவது யாருமறிந்திலார்
அன்பேசிவமாவதியாரு மறிந்தபின்
அன்பேசிவமாய் அமர்ந்திருந்தாரே— [என்றார்.

---

## ஷவுக்கத்தலியின் தாயார் செய்து வந்த தினசரிப் பிரார்த்தனை.

எனது ஆண்டவனே! நான் ஏழு எட்டு வயது சிறு பெண்ணாயிருந்த போது வெள்ளையருக்கு இந்தியாவின் கோட்டை வாசல் திறந்து விடப்பட்டது. அதனால் இந் நாட்டில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டு நாங்கள் சுயராஜ்யத்தை இழந்தோம். நான் சாவதற்குள் மற்றொரு மாறுதல் உண்டாகி இந்த அந்நிய ராஜ்யம் ஒழிந்து, எந் நாடு மீண்டும் சுயராஜ்யம் பெறுமாறு அருள் புரிவீராக.

## ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகளின் உபதேசம்.

ஓ இந்தியாவே! சீதை, சாவித்திரி, தமயந்தி முதலிய கற்பிற்சிறந்த உத்தமிகளை மறவாதே! உனது பரதேவதை யோகிகளிலும் உயர்ந்த யோகியாகிய உமாபதி சங்கரன் என்பதை மறவாதே! உனது விவேகமும் உனது செல்வமும் உனது வாழ்வும் உன்னுடைய இந்திரிய போகத்துக் கல்லவென்பதையும், உனது தனிமையான பிரத்தியேக அனுபவத்திற்காகவல்லவென்பதையும் மறவாதே! நீ பிறந்தது முதல் ஜகதம்பிகைக்கே சமர்ப்பிக்கப் பட்டிருப்பதை மறவாதே! உனது ஜன சமூகம் அனந்த ஸ்வரூபிணியான மகா மாயையின் சாயை மாத்திரமே யென்பதை மறவாதே! மிகத்தாழ்ந்த ஜாதியானும், அறிவிலியும், ஏழையும், எழுத்தறியாதவனும், தெருப் பெருக்குவோனும், பறையனுங்கூட உன் இரத்தத்திற் சேர்ந்தவனென்பதையும் உன் சகோதரனென்பதையும் மறவாதே! ஓ வீரனே தைரியமாயிரு! நீ இந்தியன் என்பதைப் பற்றிப் பெருமை பாராட்டு! "நான் இந்தியன்; ஒவ்வொரு இந்தியனும் என் சகோதரனே" என்று சொல்வாய்! "கல்லாத இந்தியனும் ஏழை இந்தியனும், பிராமண இந்தியனும், எல்லாரும் எனது சகோதரரே" என்று சாற்று! கந்தைத் துணியுடுத்து உரத்த குரலெடுத்து "இந்தியர்களே என் சகோதரர்கள்; இந்தியர்களே எனது உயிர்; இந்தியாவின் தேவ தேவிகளே எனக்குப் பரதெய்வம்; இந்திய ஜன சமூகமே நான் பிறந்து வளர்ந்த தொட்டில்; என் யௌவனத்தின் நந்தவனம்; என் மூப்பின் புண்ய தபோவனம்" என்று பெருமையுடன் கூறு! சகோதரனே! "பாரத வர்ஷத்தின் புண்ய பூமியே எனக்குச் சிறந்த சொர்க்கம்; இந்தியாவின் க்ஷேமமே என்க்ஷேமம்" என்று சிந்தித்து "ஹே பகவர்! ஹே ஜகன்மாதா! எனக்கு ஆண்மை யருள்வாய்! ஹே பலதாயினீ! என் பலவீனத்தைப் போக்கி என் பேடித்தனத்தை நீக்கி என்னை ஆண் மகனுக்கு" என்று அல்லும் பகலும் பிரார்த்தனை செய்!

ஹிந்து மதாபிமான சங்கம்,
காரைக்குடி.

---

## புதுப்பிறப்பும், புதுவருடமும்.

### கிறிஸ்தவ நண்பர்கட்கு.

இந்நாட்களில் கிறிஸ்தவர்களாகிய நாம் இருவித சந்தோஷங்களுடைய பண்டிகைகளை ஆசரிக்கிறவர்களா யிருக்கின்றோம். அவை புதுப் பிறப்பும், புது வருடமுமேயாம். புதுப் பிறப்பு: கிறிஸ்துவின் பிறப்பைப்பற்றி அறிகிறோம். சுமார் 1928 வருஷங்களுக்கு முன் கிறிஸ்து என்னும் இரட்சகர் இவ்வுலகத்தில் மானிடரா யவதரித்த சம்பவங்களை நாம் வருடாவருடம் தியானிக்கிறவர்களா யிருக்கின்றோம். அதனால் நமக்கு உண்டாகும் சிலாக்கியம் என்ன? இரட்சிப்பு. 1 தீ மோ. 1-15. சிறு பிள்ளைகளாகுதல். 1 பேது. 2;2-3. நம்மிடத்தில் குடிகொண்டுள்ள சகலவித துர்க்குணங்களையும் அழித்தவர்களாய்ப் புதுப்பிறப்புடையவர்களாய் ஜீவித்திருப்போமாக.

புதுவருடம்: காலங்கள் மாறி மாறிச் செல்லுகின்றன. ஆங்கிலேயக் கணக்கின்படி 365 நாட்கள் கொண்டது 1 வருஷம் எனப்படுகின்றது. நாம் ஆசரிக்கிற புது வருஷமானது கிறிஸ்து பிறந்த எட்டாம் தினமாகிய விருத்த சேதனத்திருநாள் முதல் கொண்டு ஆரம்பமாகின்றது. ஆகையால் நாம் அதை ஓர் விசேஷ தினமாக பாவிக்கின்றோம்.

இதில் கவனிக்க வேண்டியவை:— கடந்த நாட்களில் யாதொருவித விக்கினமுமின்றிக் காப்பாற்றி, இப்பேர்பட்ட நாளைக் காணச்செய்த தயவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் செய்தல். [illegible] புதிய ஜீவியம் செய்வது (புதிய சிருஷ்டிப்பு) கலா. 6-15, புதிதாய்ப் பிறந்த கிறிஸ்துவைத் தரித்தவர்களாய் அவருடைய அடிச்சுவடுகளைப் பின் பற்றுகிறவர்களாயிருப்போமாக, கொலோ. 3-10, எல்லாம் வல்ல இறைவன் நம்மை புது ஜீவியம் செய்யக் கிருபை புரிவாராக.

பி. [illegible]

---

## ஸத்தியதரிசனம்.

### மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 4. அத்தியாயம் 30.

என்னுடைய ஆகார கிரமத்தில் சில மாறுதல்களை ஏற்படுத்துவதற்கு கஸ்தூரிபாயின் தேக அசௌக்கியம் எவ்விதம் காரணமாக விருந்ததென்பதை முந்தின அத்தியாயத்தில் நான் சொல்லியிருக்கிறேன். பிற்காலத்தில் பிரம்மச்சரிய தர்மத்தை ஆதரிப்பதற்காக இன்னும் அதிகமான மாறுதல்களை நான் ஏற்படுத்திக்கொண்டேன்.

முதன்மையாக, பாலை உபயோகிப்பதை நிறுத்திக்கொண்டேன். பாலானது மிருக உணர்ச்சியைக் கிளப்பிவிடுகிறதென்று ராயசந்த் பாயிடமிருந்து முதன் முதலாக நான் தெரிந்துகொண்டேன். சாகபக்ஷணத்தைப்பற்றிய புத்தகங்களும் இந்த எண்ணம் என்மனதில் வேரூன்றும்படி செய்தன. இருந்தாலும் நான் பிரம்மசரிய விரதம் பூணும்வரை பாலை உபயோகிப்பதை நிறுத்திக்கொண்டு விடுவதென்று நான் முடிவுசெய்வதற்கில்லை. சரீர சம்ரக்ஷணத்திற்குப் பாலைச் சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமில்லை யென்பதை வெகுகாலம் முன்பே நான் தெரிந்து கொண்டிருந்தேன். இருந்தாலும் அதைச் சுலபமாக விட்டுவிடுவதற்கில்லை. இந்திரிய அடக்கத்தை உத்தேசித்து பாலின் உபயோகத்தை நிறுத்திக்கொண்டு விட வேண்டுமென்ற உணர்ச்சி என்னுள் அதிகரித்து வந்த காலத்தில், பசுக்களையும் எருமைகளையும் சொந்தக்காரர்கள் எவ்விதம் ஹிம்சிக்கிறார்களென்பதைப் பற்றி கல்கத்தாவிலிருந்து சில கிரந்தங்கள் எனக்கு எட்டின. இவை என்னுடைய மனதைத் திருப்பின. மிஸ்டர்.காலென்பெக்குடன் இதைப் பற்றிப் பேசினேன்.

தென்னாப்பிரிக்கா ஸத்யாக்கிரகப் போராட்ட சரித்திரத்தில் அவருடைய பெயரை நான் அறிமுகம் செய்து வைத்து, முந்தின அத்தியாயமொன்றில் அவரைப்பற்றி பிரஸ்தாபித்திருந்த போதிலும், அவரைப்பற்றி இன்னும் இவ்விஷயங்களைச் சொல்லவேண்டியது அவசியமென்று நான் நினைக்கிறேன். அகஸ்மாத்தாகவே நாங்கள் சந்தித்துக் கொண்டோம். அவர் மிஸ்டர். கானின் நண்பர். பரலோக சிந்தை அவருக்கு அதிகமாக இருந்ததை மிஸ்டர். கான் தெரிந்து கொண்டிருந்ததால் அவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவரை நான் நன்றாகத் தெரிந்து கொண்டபிறகு, உதாரத் தன்மையிலும், ஆடம்பரத்திலும் அவருக்கு இருந்த வேட்கையைக் கண்டு நான் திடுக்கிட்டுப் போனேன். இருந்தாலும் அவர் என்னுடன் முதல் தடவை சம்பாஷணை செய்கையிலேயே மத சம்பந்தமான விஷயங்களைப்பற்றி ரஸமான பல கேள்விகளைக் கேட்டார். மொத்தம் புத்தருடைய தியாகத்தைப் பற்றி அகஸ்மாத்தாக நாங்கள் சம்பாஷித்தோம். எங்களுக்குள் சீக்கிரத்தில் நெருங்கிய சிநேகமேற்பட்டது. இருவரும் எந்த விஷயத்தைப் பற்றியும் ஒரேவிதமாக அபிப்பிராயப்பட்டோம். நான் என்னுடைய வாழ்வில் செய்துகொண்டுள்ள மாறுதல்களைத் தாமும் செய்து கொள்ள வேண்டுமென்று அவர் அபிப்பிராயப்பட்டார், நாங்கள் சந்தித்தபோது அவர் ஏகாங்கியாக இருந்தார். இருந்தாலும் தமக்கு மட்டில் வீட்டுவாடகையைத் தவிர மாதம் 1200 ரூபாய் செலவழித்துக் கொண்டிருந்தார், அவர் அடக்கத்தைக் கைக்கொண்டு, செலவை மாதம் 1-க்கு 120 ரூபாயாக மட்டுக் கட்டிக் கொண்டார். என்னுடைய குடும்பத்தை நான் கலைத்து, சிறையிலிருந்து முதன் முதலாக நான் விடுதலை அடைந்தபிறகு நாங்கள் சேர்ந்து வசிக்க ஆரம்பித்தோம். நாங்கள் கஷ்டமான வாழ்வை நடத்திவந்தோம்.

இந்தக் காலத்தில்தான் பாலைப்பற்றிய விவாதம் ஏற்பட்டது. மிஸ்டர் காலன்பெக் "பாலின் தோஷத்தைப் பற்றி நாம் அடிக்கடி பேசுகிறோம். அது அவசியமில்லை" யென்று சொன்னார். அவர் அவ்விதம் சொன்னதில் நான் அதிசயமடைகிறேன். இருந்தாலும் நான் அதை மனப்பூர்வமாக வரவேற்று, இருவரும் அன்று முதலே பாலை வர்ஜம் செய்வதென்று சங்கற்பம் செய்துகொண்டோம். 1912-ம் வருஷத்தில் டால்ஸ்டாய் பண்ணையில் இந்த சம்பவம் நிகழ்ந்தது.

இவ்விதம் மறுத்துக் கொண்டதில் மட்டில் நான் திருப்தியடையவில்லை. இதற்குச் சிறிது காலத்திற்குப் பிறகு கனிகளைப் புசிப்பதென்று சங்கற்பம் செய்துகொண்டேன். அதிலும் சுலபமாகக் கிடைக்கும் கனிகளையே புசித்து வந்தேன். ஏழைகளைப்போல் வசித்து வர வேண்டு மென்பது எங்களுடைய அவா.

கனிகளைப் புசித்து வந்தது சவுகரியமாவு மிருந்தது. சமையல் வேலைக்கு அவசியமில்லை. பச்சை நிலக்கடலை, வாழைப்பழம், ஈச்சம்பழம், எலுமிச்சம்பழம், ஆலிவ் எண்ணெய் இவைகளையே உபயோகித்து வந்தோம்.

பிரம்மசரிய வாழ்க்கை முறையை அடைய விரும்புகிறவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் ஒரு எச்சரிக்கை செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகாரக் கிரமத்திற்கும் பிரம்மச்சரியத்திற்கும் நெருங்கிய சம்பந்த மிருக்கிறதென்று நான் சொல்லியிருந்தபோதிலும், மனம் தான் பிரதானம். மனம் சுத்தமாக இல்லாமலிருக்கையில், உபவாஸத்தினால் அது தூய்மையடையும்படி செய்துவிட முடியாது. ஆகாரக் கிரமத்தை மாற்றுவதால் மனம் பேதளிப்பதில்லை. தீவிரமாக ஆத்ம சோதனை செய்துகொண்டு, நமது சரீரத்தை ஆண்டவனிடத்தில் அர்ப்பணம் செய்துவிட்டாலன்றி மனோவிகாரங்களை ஒழித்துக்கொள்ளுவது சாத்தியமில்லை. இருந்தாலும் மனதிற்கும் சரீரத்திற்கும் நெருங்கிய சம்பந்த மிருந்துவருகிறது. குஷியாக விருக்க வேண்டுமென்று மன விரும்பின், ஆடம்பரங்களிலும் நாகரீகமான பதார்த்தங்களிலும் மனம் திரும்பும். இதை ஒடுக்கிக் கொள்ளுவதற்காக ஆகாரக் கிரமத்தை வரையறுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகையால் பீடிக்கப்பட்டிருக்கும் மனமானது உணர்ச்சிகளை யடக்கிக் கொள்வதற்குப் பதிலாக அவைகளுக்கு அடிமைப்பட்டு விடுகிறது. ஆகவே சுத்தமானதாகவும், உத்வேகத்தை உண்டுபண்ணக் கூடாததாகவும் இருக்கும் ஆகாரத்தைப் புசிப்பதுடன் இடை யிடையே உபவாசமும் இருந்துவரவேண்டும்.

ஆகவே ஆகாரக் கிரமத்தை வரையறுத்துக் கொள்ளுவதிலும் உபவாஸமிருப்பதிலுமே நம்பிக்கையுடையவர்கள் எவ்விதம் மோசம்போய் விடுகிறார்களோ, அவ்விதமே ஆகாரக்கிரமத்தை வரையறுத்துக்கொள்ளுவதிலும் உபவாஸமிருப்பதிலும் அலக்ஷியமாக இருக்கிறவர்களும் ஏமாந்து போகிறார்கள். தன்னடக்க வழியில் மனம் வேலை செய்து கொண்டிருக்கிறவர்களுக்கு ஆகாரக் கிரமத்தில் வரையறையும் உபவாஸமும் அனுகூலத்தை விளைவிக்கும், அவைகளுடைய உபகாரமின்றி மனோ விகாரங்களை அடக்கிக் [illegible]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection